**SHOP available**
on Commission Basis/Mgt.
on
WEMBLEY HIGH ROAD
Contact: 07775 786 371

இலவசம்
# The UDHAYAN
# உதயன்

**Briden Video Vision**
Video, Video CDs, CDs, Audios Sale & Rental
Tamil, Hindi & Singhala
Sales & Rental
76 Hoe Street, Walthamstow, London E17
Tel: 07957 110 093 / 5205403
Opening Hrs: 10.00 - 11.00 ( 7 days a Week)

இலவசம்!!! உங்கள் பிரதியினை இலவசமாக எடுத்து செல்லுங்கள்!
UN-3 Tuesday, 7rd March, 2000 12 Pages e-mail : thelondon@udhayan.freeserve.co.uk


உள்ளே.....

சமூக அரங்கு 9ம் பக்கம்

வர்த்தகப் பகுதியில்
லண்டனில் வளர்ந்துவரும்
நிதி ஆலோசகர்...
6ம் பக்கம்

கள்ள கிரடிட் கார்ட்...
4ம் பக்கம்

# விசா பெற £10,000 பிணை!!!
# இது ஓர் இனவாத திட்டம்?




(28 பெப், வெஸ்ற்மினிஸ்ரர்) விசா பெறுவதற்கு பத்தாயிரம் பவுன் பிணை கட்ட வேண்டும் என்ற பரீட்சார்த்த நடைமுறை (உதயன் - இதழ் 2, 5ம் பக்) பெரும்பான்மை பலத்துடன் பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தை பெறலாம்; என இத் திட்டத்திற்கு எதிரான சில பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் மக்டோனால்ட், வெஸ்ற்மினிஸ்ரறில், South Asian Solidarity குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் தெரிவித்து உள்ளார். இது நடைமுறைக்கு வரும் பட்சத்தில்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# பராகுவேயில் நிகழ்ந்த சோகம்
# அங்கங்கள் இழந்த தமிழ் அகதிகள்

(15 பெப், செக் குடியரசு) செக் குடியரசின் தலை நகர் பராகுவேயின் பிரதான குடிவரவு அலுவலகத்தின் கட்டடத்திற்கு அருகில் இருந்து; ஜனவரியில் ஓர் காலைப் பொழுதில் 5 இலங்கை தமிழர்கள் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு உள்ளனர். கடுமையான குளிரினால் இவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்ததால் உடனடியாக மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டனர். அங்கு அவர்களுடைய கால்ப்பாதம், கைகள் என்பன குருதி சுற்றோட்டம் தடைப்பட்டு இருந்ததால்; இரத்த ஓட்டம் தடைப்பட்ட உறுப்புகள் அகற்றப்பட வேண்டிய பரிதாபமான நிலை ஏற்பட்டது.




இவர்கள் கடுமையான குளிரினால் நீண்ட நேரம் தாக்கப்பட்டதால், frostbite எனும் நோய்க்கு இலக்காகினர். கடும் குளிர் காரணமாக மூக்கு, காதுகள், விரல்கள், பாதங்கள் போன்றவற்றில் உள்ள இழையங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாவதால் இந் நிலை ஏற்படுகிறது. இழையங்களை கடும் குளிர் தாக்கும் போது, அவ் இழையங்களில் குருதி விநியோக்கும் குருதிக் கலன்கள் பாதிக்கப்பட்டு அப் பகுதிகளிற்கான குருதி விநியோகம் தடைப்பட்டு; அவ் உறுப்புகளிற்கு ஒக்ஸிஜன் பற்றா குறை ஏற்பட்டு; அவ் உறுப்புகள்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

**Palm Beach**
Fully Licensed
Finest Sri Lankan &
South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm
and
6.00 pm to midnight
Specialised in catering for wedding and parties
17 Ealing Road Wembley Middlx, HA0 4AA
Tel: 0181 900-8664 / 0956-439 765
07939 587 338 / 020 8900 1990

**INTERNET CAFE !**
Surf the net for
only 99p
per Hour
OPEN 24 HOURS
Also International Call Centre and
Discounted International Phonecards
e.g. £5 cards from £3.50
SUSWIN 2 (opposite Job Centre)
66 Upper Tooting Rd SW17
0181 767 1005
3 mins walk from Tooting Bec Station -
Free parking available nearby
INTERNET CUSTOMER GET 1.2 HR FREE
when Purchasing 1 Hr.
ON PRODUCTION OF THIS ADVERT ! - Valid until 31/3/00

**RENSU**
MILLENIUM MEGA DEAL
DURACELL Batteries from 99p
CAR ACCESSORIES,
FILM AND BATTERIES,
VIDEOS, DUREX AND
MATES, SOFT TOYS,
SOFT DRINKS AND
SNACKS.
TEL: 01753 554970
FAX: 01753 554898

உங்கள் திருப்தி - எங்கள் சேவை
**LinkAIR**
Travels Limited
குறைந்த கட்டனம் - சிறந்த விதமான சேவை -
உலகின் எப்பகுதிக்கும் விரைவான சேவை. பிரிட்டன்
உட்பட ஐரோப்பா முழுவதும். தமிழ்நாடு அரசாங்கத்தின்
சுற்றுலா பயணத்துறையை அபிவிருத்தி
நிறுவனத்தினால் ( T.T.D.S ) அங்கீகரிக்கப்பட்ட ஒரே
பிரதிநிதி எங்கள் நிறுவணம்தான்.
Specialist for:
SRI LANKA -
SOUTH INDIA
SINGAPORE &
CANADA
விசேட சலுகைகலுடன் தமிழ்நாடு
சுற்றுலா ஏற்பாடு செய்து தரப்படும்
To CHEENAI Special fair on
BRITISH AIRWAYS
Call:
SIVA PREM / MOLY
RESHMA
SHEELA
ATOL 75047
IATA
SriLankan
361 London Road, Croydon, Surrey CR0 3PB
Tel: 0181-665 0206 Fax: 0181-689 2576
e-mail: sales@linkair.co.uk Emergency Tel. No.: 0956 676 360

Palm Palace

Fully Licenced

PALM PALACE

Taste Of Paradise

We Specialize in Srilankan & Southindian Dishes

and we cater for all the occasion

We are closed on Tuesdays

OPEN 6 DAYS A WEEK
OPENING HOURS
MONDAY, WEDNESDAY & THURSDAY
FROM 12 NOON TO 3 PM
&
6 PM TO 11 PM
FRIDAY, SATURDAY AND SUNDAY
FROM 12 NOON TO 3PM
& 6PM TO 12 Midnight

80 South Road Southall
Middlesex, UB1 1RD

Tel: 0181 574 9209

Email: PalmPalace@hotmail.com

# பட்டப்பகலில் துணிகர கொள்ளை முயற்சி

## தடுக்முயன்ற கடை உரிமையாளர் படுகாயம்

(04 பெப், பெரிவேல்) - இளம் தமிழ் குடும்பத்தினரின் கடையில் கொள்ளை இட மேற்கொள்ளப்பட்ட முயற்சி அக் கடை உரிமையாளரால் தடுக்கப்பட்டது. அப்போது ஏற்பட்ட தடுப்பு முயற்சியில் உரிமையாளரின் கண்ணிற்கு சற்று கீழாக காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு எடுத்து செல்லப்பட்டார். அடி சற்று மேலாக விழுந்து இருந்தால் அவருடைய கண் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கும்.

திரு அன்னலிங்கம் சின்னத்துரை அவர்களும் அவரது துணைவி சத்யரூபினி அன்னலிங்கம் அவர்களும் கடந்த 5 ஆண்டுகளாக Bilton Rdல் உள்ள Mohan Food Market நடாத்தி வருகிறார்கள். சம்பவ தினம் வழமை போல் திருமதி சத்யரூபினி till அருகில் நின்றதாகவும்; ஆசியநாட்டவர் ஒருவர் வந்து லுக்கோசேட் கேட்டதாகவும்; தான் அவரிற்கு இருக்கும் இடத்தை குறிப்பிட்டு காட்டியதாகவும் கூறி தொடர்ந்தார் சத்யரூபினி. லுக்கோசெட்டை எடுத்த அந்த இளைஞன் திடீரென தாவி சத்யரூபினியின் வாயை தன் கையால் பொத்தி கொண்டு அவருடைய வயிற்றில் கூரிய கத்தியை வைத்தபடி; till ஐ திறக்கும் படி வெருட்டினான். இவர் till ஐ திறக்கவும், வேறு அலுவலாக கீழே திரு அன்னலிங்கம் வரவும் சரியாக இருந்தது. நிலைமையை ஊகித்து கொண்டவர்; அவ் இளைஞன் கத்தி வைத்திருந்த கையை இறுக பிடித்து மனைவியை காப்பாற்றி கொண்டார். அன்னலிங்கத்தின் வருகையை எதிர்பாராத இளைஞன் பதட்டப்பட்டு தான் தப்பிக்க அருகில் இருந்த போத்தலால் அன்னலிங்கத்திற்கு ஓங்கி அடித்து விட்டு, சிவப்பு காரில் தப்பித்து கொண்டான். அவன் அடித்ததில் அவரிற்கு காயம்பட்டது. அடித்ததும் சத்யரூபினி உதவிக்கு கூவி அழைத்ததில், முன் நிறுவனத்தில் வேலை செய்த வெள்ளை இன பெண் ஓடி வந்து பொலிஸை அழைத்து சாட்சியும் வழங்கினார்.

இப்படியான ஓர் சம்பவம் நடப்பது இதுவே முதல் தடவை என்று கூறி மனவருத்தம் அடைந்தார் திருமதி சத்யரூபினி. தாம் இப்படியான ஓர் கொள்ளை முயற்சியை எதிர்பார்க்காத காரணத்தினால் Colsed Circuit TVயில் ஒளிநாடாவை இடாததால் சம்பவம் பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறினார். மேலும் இதே வீதியில் உள்ள தமிழ் கடையில் சில வாரங்களிற்கு முன் களவு நடந்து உள்ளதாக தெரியவருகிறது.

## எதிர்ப்பு போராட்டம்:

மார்ச் 11ம் திகதி ஓகிங்ரன் தடுப்பு முகாம் திறப்பை எதிர்த்து போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது. தஞ்சம் கோருவோரை குற்றவாளிகள் போல் தடுத்து வைத்து குற்றவாளிகளாக நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இப் போராட்டம் நடத்தப்பட உள்ளது. இங்கு 400 பேர் வரை வரவேற்பு மையம் என்ற போர்வையில் தடுத்து வைக்கப்பட உள்ளனர். இவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பகுதிகளை விட மற்றய பகுதிகளிற்கு செல்லவும் அனுதிக்கப்படாது மிக கடுமையான காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட உள்ளனர். விரைவாக விண்ணப்பங்களை பரிசீலித்து 10 நாட்களிற்குள் விண்ணப்பம் பற்றிய முடிவு எடுக்கப்படும் என அரசு கூறுகிறது. ஆனால் இது நடைமுறை சாத்தியம் அற்றது என்றும் தடுத்து வைக்கப்படுபவர்கள் 18 மாதம் வரை கூட அங்கு இருக்க வேண்டிவரலாம் என்றும் போராட்ட ஒழுங்கமைப்பு குழுவினர் தெரிவிக்கின்றனர். மேலதிக விபரங்களிற்கு 01223462187 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். போராட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் Cambridgeshire Against Refugee Detention (CARD).

## சமூக பதட்டத்தை தூண்டும் பரவலாக்கல்:

இலண்டனிலும் தென்கிழக்கு பகுதியிலும் குவிந்துள்ள தஞ்ச விண்ணப்பதாரரை நாடுபூராவும் பரவலாக்கும் திட்டம் சிக்கலில் உள்ளது. ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பமாக உள்ள இத் திட்டத்திற்கு, 20,000 இடங்கள் தேவைப்படுகிறது; ஆனால் 4,000 இடங்கள் மட்டுமே இது வரை உள்ளாட்சி மன்றங்களால் வழங்கப்பட்டு உள்ளது. மேலதிக இடங்களை உள்ளாட்சி மன்றங்களில் இருந்து அரசு பெற்று கொள்ளும் என உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவ் ஆண்டிற்குள் 50,000 விண்ணப்பதாரரை பிரித்தானியாவின் 9 பகுதிகளிற்கு பரவலாக்க உள்துறை அமைச்சு திட்டம் இட்டு உள்ளது. ஆனால் அகதிகளை சிறிய கிராம பகுதிகளிற்குள் குடி அமர்த்தும் போது, அங்கு சமூக பதட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டென அஞ்சப்படுகிறது. அதற்கு சாட்சியாக அமைந்ததே டோவர் கலகம். கிராம பகுதிகளில் மக்களிடையே அகதிகள் பற்றிய அறிவின்மையும், சந்தேக மனப்பான்மையும் தான் இப்படியான பதட்டத்திற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. பெரும்பாலும் தஞ்சம் கோருவோர் வேறுபட்ட இனங்கள் வாழும் பகுதிகளில், அதே இனத்தவர்கள் செறிந்து வாழும் பகுதியிலேயே குடி அமர்த்தப்பட உள்ளனர். ஈழத் தமிழர் எங்கு குடி அமர்த்தப்படுவர் என்பதனை அறிய முடியவில்லை.

இது வரை 1,200 பேர் தமது சொந்த விருப்பில் வெவ்வேறு பகுதிகளிற்கு பரவலாக்கப்பட்டு உள்ளனர். அரசு உள்ளாட்சி மன்றங்களிற்கு, அகதிகள் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வழங்கும் நிதியை வாரத்திற்கு £20 அதிகரித்து விரைவாக தங்கும் இடங்களை பெற கேட்டு உள்ளது.

CHURCH END
CASH & CARRY

Tel: 020 8200 4552

155 CHURCH LANE
KINGSBURY
LONDON NW9 8JU

OPENING HRS. 8 am - 9pm
Monday - Saturday
Sunday 9am - 8pm

Church Lane'ல் (Kingsbury) தமிழர் நிறுவணம்

உங்கள் அன்றாட தேவையான

மரக்கறி, மீண்வகைகள், பலசரக்கு சாமான்கள்

மற்றும் பலவகை பொருட்களுடன் CD, AUDIO,

VIDEO Tapes விற்பனைக்கும், வீடியோ வுயிநள

வாடகைக்கும் பெற்றிட வாருங்கள் வந்து பாருங்கள்

Church Lane CASH & CARRY

LACE TUTORIAL COLLEGE

58A UPPER TOOTING ROAD
LONDON SW17 7PB
TEL: 0181 767 4698 / 0181 672 5390

Principal: R Mahalingham MBIM F.I. Manf
Registrar: S L Airey MA (Cantab) LLB

AFTER SCHOOL & SATURDAY CLASSES

ENGLISH MATHEMATICS VERBAL/NON VERBAL REASONING
PRIMARY / EARLY SECONDARY EDUCATION SUPPORT CLASSES
PRIVATE ENTRANCE EXAMINATION PREPARATION CLASSES

GCE O'LEVEL TUTORIAL COURSES IN

MATHEMATICS SCIENCE ECONOMICS ACCOUNTING
LAW BUSINESS STUDIES COMPUTING

Our experienced tutors will provide the support your child needs
Every year minimum 2 scholarships and 6 places in private schools are obtained

## உள்ளூர் செய்திகள்

## இலண்டனை சுற்றி:

**தற்கொலை:** அக்ஸ்பிரிட்ஜ்ஜில் தமிழர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டு உள்ளார்.

**விபத்து:** ரெட்பிரிட்ஜ் - இரண்டு வாகனங்கள் மோதி கொண்டதில் ஏற்பட்ட விபத்தில் இரண்டு வாகனத்தில் இருந்தோரிற்கும் படுகாயம் ஏற்பட்டு உள்ளது. மோதி கொண்ட இரு வாகனங்களுமே தமிழர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது. விபத்தில் ஒரு வாகனத்தில் பயணித்தவருடைய கையில் முறிவு ஏற்பட்டது. மற்றைய வாகனத்தில் வந்தவர் நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது. இவர் மருத்துவ மனையில் intensive care ல் சிகிச்சை பெற்று வருகிறார். இவர் விபத்தின் போது இருக்கை பட்டியை அணியாத நிலையில் இருந்ததாக மறுமுனையில் காயப்பட்டவர் தெரிவித்து உள்ளார்.

**தாக்குதல்:** வெம்பிளி ஈலிங் றோட்டில் உள்ள கணபதி கடை உரிமையாளர், பெப்ரவரி 24ம் திகதி கறுப்பு இன கும்பலால் கடையில் வைத்து தாக்கப்பட்டு உள்ளார். கடைக்குள் இவர்கள் வருவதை கண்டதும் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படும் என எண்ணி மற்றயவர்களையும் உஸார்படுத்தி இருக்கிறார் உரிமையாளர். அவரது செய்கையையும் அவர் தமிழில் கூறிய முகபாவத்தையும் வைத்து தங்களை பற்றியே ஏதோ பேசுகிறார்கள் என புரிந்து கொண்டு; போத்தலினால் உரிமையாளரை தாக்கிவிட்டு ஓடிவிட்டார்கள். இக் கடையில் இப்படியான கும்பலின் தொல்லைகள் அதிகம் என அயலில் விசாரித்த போது தெரிய வந்தது.

**இளைஞர் கைது:** சவுத்தோலில் உள்ள தமிழினி கடையில் கத்தியை காட்டிய தமிழ் பணியாளர் கைது செய்யப்பட்டார். கறுப்பு இனத்தவர் ஒருவர் கடைக்கு பொருட்கள் வாங்க வந்தபோது, அவரை திருட்டுக்கு வந்ததாக சந்தேகப்பட்டு கத்தியை காட்டி உள்ளார் பணியாளர். இதனை பொலிஸிற்கு தெரியப்படுத்தி இருக்கிறார் அந்த நபர். இதனை தொடர்ந்து கத்தியை காட்டிய இளைஞரை பொலிஸ் கைது செய்து பின் விடுவித்து உள்ளது.

**கல்லால் தாக்குதல்:** வெம்பிளி கைய் றோட்டில் உள்ள சாயி குறொசர்ஸ்ஸில் பெப்ரவரி 20ம் திகதி நடந்த தாக்குதல் சம்பவத்தில் கடையில் நின்ற ஒருவரிற்கு பாரிய காயம் ஏற்பட்டு உள்ளது. இங்கு இரவு கடை மூடும் போது சிலர் வந்து சேட்டைகள் விடுவது வழக்கம். அதனால் கடை மூடும் நேரம் சிலர் கடையில் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டாலும் என்று நிற்பார்கள். சம்பவ தினம் வழமையான அந்த குழப்படி கும்பல் வந்து சேட்டைகள் பண்ண, மறைந்து இருந்த மற்றயவர்கள் வந்து அந்த கும்பலை விரட்டினர். இவர்கள் கலைத்து கலைத்து 100 யார் தூரம் வரை விரட்டி சென்று உள்ளனர். அந்த கும்பலும் ஓடி ஓடியே தம்மிடம் சிக்கியவற்றால் கடைக்காரரிற்கு எறிந்து உள்ளனர். இப்படி எறிந்த போது, அக் கும்பல் எறிந்த கல்லு, கடை உரிமையாளர் அன்ரனிக்கு பக்கத்தில் நின்றவரிற்கு பட்டு இரத்தம் சிந்தியது. சிகிச்சையில் கல்லடிபட்டவரிற்கு 12 இழை போடப்பட்டதாக தெரியவருகிறது.

### துப்பாக்கிகள் அதிகரிப்பு:

இலண்டன் தெருக்களில் துப்பாக்கி பாவனை அதிகரித்து வருவதாக, ஸ்கொட்லன்ட் யாட் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. தலைநகர் இலண்டனில் மட்டும் மாதம் 3 பேர் என்ற அளவில் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகின்றனர். இத் துப்பாக்கி கலாச்சாரத்தில் தமிழ் காடையர்களும் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பது தெரிந்தால், உடனடியாக ஸ்கொட்லண்ட் யாட் குற்ற தடுப்பு பிரிவிற்கு (0800 555 111) தகவல் தரும்படி பொலிஸ் தரப்பு கேட்டுள்ளது.

## வரி குறைகிறது:

2000 ஆண்டு ஏப்ரலில் இருந்து வருமானத்தில் இருந்து கழிக்கப்படும் NI Contribution குறைக்கப்பட உள்ளது. £28,000 ற்குள் ஆண்டு வருமானம் (வாரத்திற்கு £540) உள்ளவர்களிற்கு, NI Contribution குறைக்கப்பட உள்ளது. இதன் மூலம் 16.6 மில்லியன் தொழிலாளர்கள் பயனடைய உள்ளனர். பிரித்தானியாவின் நடுத்தர வர்க்கத்தை, தன் பக்கம் தக்க வைப்பதில் தொழிற்கட்சி மிகவும் அவதானமாக உள்ளது. இவர்களே பிரித்தானியாவின் பெரிய வாக்கு வங்கி என்பது குறிப்பிடத்தக்கது. மறுபக்கத்தில் £28,000 தொகைக்கு மேல் ஆண்டு வருமானம் எடுக்கும் 3.9 மில்லியன் பேரிற்கு, NI Contribution கூட்டப்பட உள்ளது. மேலும் இவ் ஆண்டு, கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட குறைந்தபட்ச சம்பளம் 10 பென்சினால், அதாவது £3.60 ல் இருந்து £3.70 ஆக்கப்பட உள்ளது. இச் சம்பள உயர்வு ஒப்பீட்டு அளவில் மிக குறைவு; என்றும் குறைந்தபட்சம் £5.50 ற்கு மேல் வழங்கப்பட வேண்டும்; என்றும் தொழிற்சங்கம் கேட்டு கொண்டு உள்ளது.

## இனவாதத்தை வேரறுப்போம்:



உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ரோ அவர்கள், பிரித்தானிய சமூகத்தில் இருந்து இனவாதத்தை வேரறுக்க தான் நடவடிக்கை எடுப்பேன் என உறுதி அளித்து உள்ளார். பொது மக்கள் அமைப்புகளில் இருக்கும் மறைமுக இனவாத நடவடிக்கைகளிற்கு எதிராகவும் ஏனைய மறைமுக இனவாத நடவடிக்கைகளிற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். இன உறவுகளிற்கான சட்டத்தை இறுக்கமாக்க இன சமத்துவ குழுக்கள் கொடுத்த அழுத்தங்களை தொடர்ந்தே இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதில் மிகுந்த நடை முறைசிக்கல்கள் உள்ளதாகவும் தமது வேலை மேலும் கடினமாக்கப்பட்டு உள்ளதாகவும் காவல் துறை கருத்து தெரிவித்து உள்ளது. மறைமுக இனபாகுபாடு மற்றும் தாக்குதல்களை நிரூபிப்பதில் மிகுந்த சட்டசிக்கல்கள் இருப்பது சட்ட வல்லுனர்களால் சுட்டி காட்டப்பட்டு உள்ளது.

## Benefit Fraud உதவி நல மோசடி

(இலண்டன்) உதவி நல மோசடிக்கு எதிராக தாம் வெற்றி அடைந்து வருவதாக உதவிநலத்துறை அமைச்சர் திரு அலிஸ்ர டார்லிங் தெரிவித்து உள்ளார். Income Support, Jobseeker's allowance என்பனவற்றில் ஏற்படுகின்ற மோசடியையும் இழப்பையும் வெகுவாக கட்டுப்படுத்தப் போவதாகவும் அதற்கு ஊக்கம் கொடுக்கும் விதத்தில் மோசடிகளுக்கு எதிராக விளம்பரங்களை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்தார்.



1996ல் ஆரம்பிக்கப்பட்ட முறையீட்டு தொலைபேசிச் சேவை மீண்டும் விளம்பரப்படுத்தப்பட்டு உள்ளது. மோசடியில் ஒருவர் ஈடுபடுகிறார் என்று சந்தேகிக்கப்பட்டால், 0800 854 440 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தம் முறையீட்டைக் கொடுக்க முடியும். முறையீடு செய்பவர்கள் தம்மைப்பற்றி எந்த விபரத்தையும் கொடுக்க வேண்டியதில்லை. 1996ல் அறிமுகம் செய்யப்பட்ட இம் முறையீட்டு சேவையில் 620,000 முறையீட்டு அழைப்புகள் பதிவு செய்யப்பட்டு இருந்தது. இப்போதைய பாராளுமன்ற காலத்திற்குள், Income Support மோசடியில் இருந்து £1 பில்லியனை சேமிக்கப்போவதாக அமைச்சர் குறிப்பிட்டு உள்ளார். Income Support பிரிவில் மட்டும் £2 பில்லியன் அளவு மோசடி இடம்பெறுவதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. மேலும் மோசடிகள் இடம் பெறுவதைத் தடுக்க 2003ல் Automatied Credit Transfer System நடை முறைப்படுத்தப்பட உள்ளது.

### குவியும் விண்ணப்பங்கள்:

உள்துறை அமைச்சின் தற்போதைய புள்ளி விபரங்கள் படி, இது வரை முடிவு எடுக்கப்படாத தஞ்ச விண்ணப்பங்களின் தொகை 100,000ஐ தாணடடி விட்டது. கடந்த ஆண்டு இத் தொகை 65,000 இலும் சற்று அதிகமாக இருந்தது. 1993 ஓகஸ்றிக்கு முன் வந்த 10,000 என மதிப்பிடப்பட்ட விண்ணப்பங்களில் 5,500 விண்ணப்பங்களிற்கு முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. ஓகஸ்ற் 1993ல் இருந்து டிசம்பர் 1995 வரையான 25,000 என மதிப்பிடப்பட்ட விண்ணப்பங்களில் 16,000 வரையான விண்ணப்பங்களிற்கே முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் எத்தனை முடிவுகள்? எப்படி முடிவுகள் வழங்கப்பட்டது? போன்ற விபரங்கள் ஏப்ரலில் தான் வெளியிடப்படும் என உள் துறை அமைச்சு தெரிவித்து உள்ளது.

### வீட்டு உதவியில் மோசடி

நொத்தம்ரனில் உள்ள பெரும் வீட்டு உரிமையாளரான ராஜ் சர்மா என்பவர் அரச வீட்டு உதவி வழங்கலின் கீழ் தனது வீட்டு முகாமைத்துவ நிறுவனத்திற்கு 500 அகதிகளிற்கு வீட்டு உதவியை பெற்று உள்ளார். இவ்வாறு வீட்டு உதவி மூலம் வாடகை பெற்றவர்கள் பலர் காணாமல் போய் உள்ளனர். இன்னும் சிலர் குடிவரவு துறையால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டு உள்ளனர். சர்மா 90 வதிவிடங்களிற்கு வாடகையாக £3 மில்லியன் அரசிடம் அறவிட்டு உள்ளார். இவர் மீது இப்போது விசாரணைகள் நடைபெற்று கொண்டு உள்ளது. இவர் இந்தியாவில் விடுமுறையில் உள்ளார்.

இதே போன்று சிறிய அளவில் தமிழர் வீட்டு முகாமைத்துவ அமைப்பு மேற்கொண்ட மோசடி ஆரம்ப கட்டத்திலேயே பிடிபட்டு அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## முதல் ஆசிய இனத்தவர்



குர்பக்ஸ் சிங் அவர்கள் இன சமத்துவத்திற்கான அமைப்பின் தலைமை செயலாளராக வரும் மேயில் பதவி ஏற்கிறார். அடுத்த நான்கு ஆண்டுகள் இவரே இங்கு இன சமத்துவத்தை கண்காணிக்க போகின்றார். £81,670 ஆண்டு வருமானம் பெறும்; இவ் இன சமத்துவ கண்காணிப்பு பொறுப்பை ஏற்கும்; முதலாவது ஆசியர் குர்பக்ஸ் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சாபின் ஜலந்தர் நகரில் பிறந்த இவர் தனது 6 வது வயதில் பிரித்தானியாவிற்கு வந்தார். சிங் அவர்கள் இன்றும் குருத்வராவிற்கு செல்லும் சீக்கியர். இவருடைய நியமனத்தை உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ரோ வரவேற்று உள்ளார்.

## சட்டத்தின் பிடியில் சட்ட நிறுவனம்:

Malik Law Associates என்ற நிறுவனம் தம்மிடம் பதிவு செய்யப்படும் தஞ்ச விண்ணப்ப தாரரிற்கு கள்ள அடையாள பத்திரங்களை பெற்று கொடுத்ததால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது. இந் நிறுவனத்திற்கு சட்ட உதவி நிதியாக £3 மில்லியன் வழங்க கடந்த செப்ரம்பரில் இணக்கம் காணப்பட்டது. சட்ட நிறுவனங்களை கண்காணிக்கும் The Law Society's Office மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் கிழக்கு இலண்டனில் உள்ள கிளைகளையும் மூடி உள்ளது. குற்றவியல் புலன் விசாரனைகள் தொடர்கின்றன. ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்த போலிகளிற்கே இந் நிறுவனம் போலி அடையாள பத்திரங்களை வழங்கி உள்ளது.

PALASONS JEWELLERS

Estd.1993.

199 UPPER TOOTING ROAD, LONDON SW17 7TG
TELEPHONE: 020 8682 3796

THE NEW COLLECTION

- ☆ Just introduced in addition to our superb collection a wide range of lightweight jewellery.
- ☆ Lightweight wedding sets in filligree design, in colourful enamel and studded with synthetic rubies and emeralds.
- ☆ Range of ladies' dress rings with synthetic rubies and emeralds
- ☆ An exquisite range of ladies' wedding rings ( over 200 designs to choose from)
- ☆ Men's diamond cut initial and signet rings
- ☆ In addition to Indian jewellery in 22 carat, we are also stockists of world-famous watches by SEIKO

**We have designs in golds that will suit every taste and emotion. So express yourself by choosing gold from our collection.**

SERVICES WE OFFER

- ☆ We manufacture gold jewellery to your specification and requirements by order
- ☆ We manufacture jewellery from your gold which is exempted from VAT
- ☆ Stockists for South African Krugerrands, Maple Leaf, Sovereigns and valuable coins for immediate purchase
- ☆ Facilities for spot buying available.
- ☆ We purchase your old gold. Please ask for our offer and compare
- ☆ Ear-piercing, latest frill studs and birth stones
- ☆ Valuation for insurance purpose and probate
- ☆ You are invited to call on our expertise and wide experience at any time. We look forward to seeing you and remain at your service

INVITATION

Visit our showroom at 199 Upper Tooting Road, London SW17 and view our quality in friendly and spacious surroundings fully conditioned for your comfort..Welcoming you to a world of fine creation in 22ct. old Jewellery.

# £7 பில்லியன் நஷ்ட்டம்


(02 பெப், இலண்டன்) - தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பிராங் பீல்ட், உதவிநலத் திட்டமிடல் புனரமைப்பு அமைச்சராக (Welfare Reform) 1997 மேயில் நியமிக்கப்பட்டார். இப்போது பதவி விலகி உள்ளார். அவர் உதவி நலத்துறை பற்றி குறிப்பிடுகையில், பிரித்தானியாவில் மிகவும் துஸ்பிரயோகம் செய்யப்படும் தாபனங்களில், உதவி நலத்துறை நிறுவனமே மிக மோசமான அரச அங்கமாக உள்ளது என்று கூறினார். இந் நிறுவனம் ஆண்டிற்கு £7 பில்லியன்களை சட்ட விரோதமாக அரசாங்கத்தில் தங்கியிருப்பவர்களுக்கு வழங்குகின்றது என்று தெரிவித்து இருக்கின்றார். சரியான மதிப்பீடு யாருக்கும் தெரியாது என்றும் குறிப்பிட்டு உள்ளார். இங்கு சட்ட விரோதமாக அரசிடம் இருந்து சூறையாடப்படும் பணம், இலங்கையின் மொத்த உழைப்பாளர்களுக்கு ஆண்டிற்கு £770 படி வழங்க போதுமானது ஆகும். இலங்கையில் ஒருவரின் ஆண்டுச் சராசரி வருமானமும் இதே அளவானது என்பது குறிப்பிடத்தக்கது.

உதவி நலத்துறையில் தங்கி உள்ளவர்களின் ஊழல் சம்பந்தமாக 549,000 விசாரணைகள் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் சிலரிற்கு உதவிநல கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டும் உள்ளது. மேலும் 12,000 பேர் மட்டுமே கடும் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுகின்றனர். எதிர்காலத்தில் பொய்யான காரணங்கள் கூறி உதவி நலத்துறையை துஸ்பிரயோகம் செய்பவர்களையும் ஊழலில் ஈடுபட்டு உள்ளோரையும் கடுமையாக தண்டிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என கூறப்படுகின்றது.

பிரித்தானியாவில் 65 மில்லியன் NI(National Insurance No) இலக்கங்கள் பாவனையில் உள்ளன. ஆனால் இவற்றில் 5 மில்லியன்கள் சட்ட விரோதமாக பயன்படுத்தப்படுகின்றது. போலியானவர்களை இனம் கண்டு அவர்களை தண்டித்தால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவி தேவையானவர்களுக்கும் நலன்களை

THREE GEE'S ELECTRONICS
SALES - SERVICE CENTRE - SPARE PARTS
COMPUTER,DVD, TV, VIDEO, HI-FI, CAMCORDER, CCTV, CAMCORDER
SATELLITE, MICROWAVES, IN-CAR-STEREO, ACCESSORIES
* All Makes & Models
* Computer Upgrading & Repair
* Re-Conditioned Sets Available
* Sky Digital / Satellite systems
* Multisystem Sound Conversion
* Insurance Estimates
* Also Collection & Delivery Service Available
ALSO SPARE PARTS FOR:
Vacuum Cleaners
Washing machines
Tumble dryers
Fridge Freezers
Dishwasher
Cooker Hoods
Cooker Hobbs/Over
215C EAST LANE, NORTH WEMBLEY
020-8904-8810
ESTD. OVER 60 YRS
ALL WORK GUARANTEED

# கிரடிட் கார்ட் மோசடி தமிழ் வாலிபர் கைது



தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்ட பிரபாகரனும் பாஸ்கரும்

கிழக்கு இலண்டன் வோல்த்தம்ஸ்றோவை சேர்ந்த அ--ன் என்று அழைக்கப்படும் இளைஞர் Credit Card மோசடியின் போது கைது செய்யப்பட்டு உள்ளார். இவர் கைது செய்யப்படும் போது போலியான மட்டையை கையில் வைத்து இருந்ததாக தெரியவருகிறது. இவரிற்கு இப்போது 8 வாரங்கள் சிறை தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இவரது கைதை தொடர்ந்து இவருடன் தொடர்பில் இருந்த சில இளைஞர்களும் காவல் துறையின் பார்வையில் விழுந்து இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் இப்போது கைது செய்யப்பட்டவரிற்கும் ஏற்கனவே இதே குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவரிற்கும் தொடர்பு உள்ளதாக மேலதிக செய்திகள் தெரிவிக்கின்றன. காவல்துறை இவர்களை சுற்றி கண்காணிப்பு வலையை உருவாக்கி (under cover operation) உள்ளதாக ஊர்ஜிதம் அற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இலத்திரனியல் மட்டை ஊழலிற்காக இலண்டனை சேர்ந்த பிரபாகரனையும் நோர்வேயை சேர்ந்த பாலகுமாரையும் தமிழ்நாடு திருச்சி போலிஸார் கைது செய்து ஓராண்டு காலமாக சிறை வைத்து உள்ளனர். இவர்கள் லலிதா ஜுவல்றி, எம் ஜி ஆர் தங்க மாளிகை, சேகர் எம்போறியம் ஆகியவற்றில் £15,000 பெறுமதியான தங்கநகைகள், பட்டு புடவைகள் என்பவற்றை பிரான்ஸ் நாட்டில் விநியோகிக்கப்பட்ட மட்டையில் வாங்கி உள்ளனர். அதே மட்டையை பாவித்து பிரபாகரன் ஶ்ரீரிங் தமிழ் நகை கடையில் £15,000 பெறுமதியான நகைகளை தனது சகாக்களான -னா, -ரா உடன் சேர்ந்து சென்று வாங்கி உள்ளார். துரதிஸ்ட வசமாக கடைக்காரர் தமிழர் என்பதால் அவரும் சேர்ந்தே இந்த ஊழலில் ஈடுபட்டார் என வங்கி சந்தேகப்பட்டதால் அவரிற்கு நஸ்ட்ட ஈடாக வழங்கிய £2,500 யும் திருப்பி கட்ட வேண்டியதாய் போய்விட்டது. தமிழ் நாட்டில் தலைப்பு செய்தியாக படத்துடன் வெளியிடப்பட்டவர்கள் உட்பட ஶ்ரீறிங்கில் அவருடன் சேர்ந்து வந்தவர்கள் யாவரும் யாழ் மாவட்டம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் என்றும் அரசியல் தஞ்சம் கோரிவந்தவர்கள் என்றும் தெரியவருகிறது.

# போலி கடவு பத்திரம் Passport

£4,000ற்கு போலி கடவு பத்திரங்களை பெற்று கொடுத்த கும்பல் கைது செய்யப்பட்டு இப்போது தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. Simon Ellis, Paul Lissenburg ஆகிய உள் நாட்டு அலுவலகத்தில் வேலை செய்த இவர்கள் மொரிஸியசை சேர்ந்த ரொபின் என்குட்சாமி, கென்யாவை சேர்ந்த கமலேஸ் தேசாய் என்கிற இரு கள்ள பேர் வழிகளுடன் இணைந்து இந்த போலி கடவு பத்திர தயாரிப்பில் ஜனவரி 96 தொடக்கம் மார்ச் 97 வரை ஈடுபட்டு உள்ளனர். பின்னவர்கள் தயாரிக்கும் கள்ள பத்திரத்திற்கு முன்னைய இருவரும் காலவரையறை அற்ற வீசா பதித்து கொடுத்தனர். இதன் மூலம் இந் நால்வரும் £200,000 சம்பாதித்து உள்ளனர். இவர்களை கைது செய்த போது இவர்களுடைய வீடுகளில் மறைத்து வைக்கப்பட்ட பணமும் கைப்பற்றப்பட்டது. அங்கவீனராக பதிவு செய்து அரச உதவிநலன்களை பெற்று கொண்டிருந்த என்குட்சாமிக்கு மொரிசியஸில் பங்களாவும் இலண்டனில் வீடுகளும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு நிறைந்த அலுவலகத்திற்கு தமது கடவு சீட்டை பயன்படுத்தி, இரவில் சென்று முன்னைய இருவரும் விசா பதிப்பார்கள் அங்கு விசேடமாக பொருத்தப்பட்ட இரகசிய கமராவில் இவர்களது நடவடிக்கை பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினர் இவர்களை கைது செய்யும் போது இவர்களிடம் 10 கடவு பத்திரங்கள் இருந்தன. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இப்படி ஓர் ஊழல் நடப்பது தெரிந்திருந்த போதும் குறிப்பான தடயங்கள் ஏதும் கிடைக்காததால் சந்தேகத்திலேயே இருந்தது. ஆனால் அங்கு வேலை செய்யும் ஒருவர் தனது விசா பதிவு முத்திரையை யாரோ மாற்றி உள்ளார்கள் என்று தெரிவித்ததை தொடர்ந்தே தீவிர புலனாய்வு மேற்கொண்டு குற்றவாளிகள் பிடிக்கப்பட்டனர். மேற் கூறப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட அதே இரவு, 11 பேர் வெவ்வேறு 11 முகவரிகளில் வைத்து கைது செய்யப்பட்டனர். இன்று வரையான கால பகுதியில் பிடிக்கப்பட்ட மோசமான கள்ள நடவடிக்கை இதுவாகும். மேல் குறிப்பிட்ட நால்வரிற்கும் 6ம் திகதி மார்ச் மாதம் சிறை தண்டனை ஆரம்பமாகிறது. இவர்கள் மூலம் கடவு பத்திரம் பெற்றவர்களுடன் உள்துறை அமைச்சு தொடர்பு கொண்டு வருகிறது.

# தேடல் வேட்டை?

தஞ்சம் கோரி பின் காணாமல் போய் உள்ளவர்களை தேடும் முயற்சி பரிசார்த்த முறையில் நியுகாமில் நடை முறைக்கு வந்து உள்ளது. பல இன மக்கள் செறிந்து வாழ்வதால் தான் நியுகாம் தெரிவு செய்யப்பட்டு இருப்பதாகவும்; இவர்கள் மத்தியில் உள்துறை அமைச்சுடன் தொடர்பு அற்றவர்கள் மறைந்து வாழ்வதாகவும் தெரியவருகிறது. இப்படி மறைந்து வாழ்பவர்களில் இலங்கை அகதிகள் என கூறி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ................ போன்ற நாடுகளில் இருந்து வந்து உள்ள தமிழர்களும் தமிழ் பேச தெரிந்தவர்களும் அடங்குகிறார்கள் என இத் தேடுதல் வேட்டைக்காக ஒழுங்கு செய்யப்பட்ட கருத்து அரங்கில் கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டார். வீடுகளிற்குள் நுழைந்து தேடுதலை நடாத்தவும் இவர்களிற்கு உரிமை வழங்கப்பட்டு உள்ளது.

## பராகுவேயில்.....

செயலிழக்கும். இந் நிலையில் இவர்கள் நீண்ட நேரம் இருந்தமையால், இவர்கள் மீட்கப்படும் போது, இவர்களது உறுப்புகள் மீள செயற்படாத நிலைக்கு சென்று; அவற்றை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி ஐவரும் யார்? எங்கு நோக்கி சென்றார்கள்? எப்படி அங்கு சிக்குண்டார்கள் என்பது பற்றிய விபரங்கள் தெரியவில்லை. செக் குடியரசின் எல்லைகளாக ஜேர்மனி, போலந்து, ஒஸ்திரியா, ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் உள்ளன. இவர்கள் ரஸ்யாவில் உள்ள அகதிகளை கடத்தும் குழுக்களின் உதவியுடன் ஜேர்மனிக்கு செல்ல முயற்சித்து இருப்பார்கள் என்றும் இடையில் முகவர்களினால் கைவிடப்பட்டு இப் பரிதாபகரமான

(தொடர்ச்சி 5ம் பக்கம்)



Established over 15 Years
The best deal in the town
nearly 1/2 price
785 HARROW ROAD, SUDBURY,
WEMBLEY

NEW &
SHOP SOILED APPLIANCES
CLEARANCE SALE
FRIDGES - FREEZERS
E / COOKERS - GAS COOKERS
DISH WASHERS - WASHING MACHINES
T / DRYERS - MICROWAVES
FRIDGE FREEZERS
ALL BRANDED MAKES
AT VERY LOW PRICES
FREE LOCAL DELIVERY
AT:
2 QUEENSBURY CIRCLE PARADE
CHARLTON ROAD
KENTON, HARROW, MIDDX.
TEL: 0208 204 2242

# உள்ளூர் செய்திகள்

## தன்னின சேர்க்கை வகுப்புகள்:

1988 முதல் உள்ளாட்சி மன்றங்கள் பாடசாலைகளில் தன்னின சேர்க்கையை தூண்டும் எல்லா அம்சங்களையும் பிரிவு 28 உள்ளாட்சி சட்டம் மூலம் தடை விதித்து இருந்தது. ஆனால் இப்போது தன்னின சேர்கையாளர்களின் உரிமைக்காக போராடும் அமைப்புகள் வழங்கும் அழுத்தத்தை தொடர்ந்து பிரிவு 28ஐ நீக்க உள்ளது அரசு. இதன் மூலம் பாடசாலைகளில் தன்னின சேர்க்கை கற்பிக்க பட உள்ளது. இதற்கு பலமான




எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டு உள்ளது. தன்னின சேர்க்கையை தூண்டுவது குடும்ப கட்டமைப்பை முழுமையாக தகர்த்துவிடும் என்பதே பிரிவு 28ஐ அப்படியே வைத்திருக்க வேண்டும் என்பவர்களின் பிரதான வாதமாக உள்ளது. ஆனால் பொதுவாக எந்த பாலியல் உறவையும், இது ஓரின சேர்க்கையானால் என்ன ஈரின சேர்க்கையானால் என்ன, மாணவர் மத்தியில் தூண்ட வேண்டாம்; அவர்கள் தாமே பிற்காலத்தில் தமது சேர்க்கையை தீர்மானிப்பார்கள், நீங்கள் அவர்களை படிக்க தூண்டுங்கள்; என்று கருதுகின்றனர். பெற்றோர் தம் குழந்தைகள் செல்லும் பாடசாலையில், தன்னின சேர்க்கை கற்பிக்கப்பட்டால், தம் குழந்தைகளை அந்த வகுப்பில் இருந்து விலத்தி கொள்ள முடியும். பிரபுக்கள் சபையில் பிரிவு 28ஐ நீக்குவதற்கான வாக்கு எடுப்பில் 45 பேர் மட்டுமே நீக்குவதற்கு ஆதரவாக வாக்கு அளித்தனர். 165 பேர் பிரிவு 28 தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று வாக்கு அளித்தனர். ஆனால் அரசு பிரிவு 28 ஐ நீக்க தொடர்ந்தும் போராடும் என பேச்சாளர் தெரிவித்து உள்ளார்.

மேற்கு இலண்டன் பிரன்ட்போர்ட் பகுதியில், நடக்க இருக்கும் ஆசிய தன்னின சேர்க்கையாளரின் கலை விழாவை பிரித்தானிய ஆசிய சமூகம் கண்டித்து உள்ளது. இவ் விழா தன்னின சேர்கையை தூண்டுவதாகவும் தமது கலாச்சாரத்தை களங்கம் செய்வதாகவும் அவர்கள் வாதிக்கின்றனர். இப்படி எதிர்ப்பு குரல் வழங்குபவர்களில் விஷ்வ இந்து பரிசத் முன்னணியில் நிற்கிறது. கடந்த ஆண்டு ஓகஸ்டில் லெய்ஸ்ரறில் இடம் பெற இருந்த இப்படியான நீகழ்ச்சி இறுதி நேரத்தில் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வுகள் கலாச்சார இடைவெளிக்கும் மனித உரிமைகளிற்கும் இடையேயான முரண்பாட்டின் வெளிப்பாடாக அமைகிறது.

## போலி திருமணங்கள்!

ஆண்டுதோறும் 7,000 முதல் 10,000 போலி திருமணங்கள் நடைபெறுவதாக உள்துறை அமைச்சின் செய்தி குறிப்பு தெரிவிக்கிறது. எனும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விசா, பிரஜா உரிமைக்காகவும்; பணத்திற்காகவும் போலி திருமணங்கள் நடாத்தப்படுகின்றன. அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் திருமண பதிவாளர்கள் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் உள்துறை அமைச்சுடன் தொடர்பு ஏற்படுத்த வழி செய்யப்பட உள்ளது. மேலும் விளம்பரங்கள் பற்றியும் அலசப்பட உள்ளது.

கடந்த ஆண்டு 21 போலி திருமண குற்றத்திற்கு தண்டனை வழங்கப்பட்டது. மறுபுறம் தனி பெற்றோரிற்கு சலுகைகள் அதிகம் என்பதால் கணவனும் மனைவியும் விவாகரத்து செய்து கொண்டதாக கூறி தனித்தனியாக அரச உதவிகளை பெறுகின்றனர். இப்படி அரசை சுரண்டிய தமிழ் தம்பதிகள் பின் நிரந்தரமாக பிரிந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்னும் பலர் இப்படி தனி பெற்றோராக உதவிகளை பெறுவதாக உதவிநல பிரிவில் பணியாற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத தமிழ் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

## குடிவரவு புள்ளி விபரம்:

460,000 மக்கள் 1998ல் பிரித்தானியாவிற்குள் வந்திருப்பதாக தேசிய புள்ளிவரவு அலுவலகம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. அதே கால பகுதியில் 80,000 பேர் மட்டுமே பிரித்தானியாவை விட்டு வெளியேறி உள்ளனர். நாட்டிற்குள் வந்தவர்களில் தஞ்சம் கோரியோர் 46,000. பொது நலவாய நாடுகளில் இருந்து விடுமுறையில் விசா பெற்று வேலைக்கு வந்தவர்கள் 40,000 இலும் சற்று அதிகமானவர்கள். ஏனையோர் பெரும்பாலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வேலை உட்பட வேறு காரணங்களால் பிரித்தானியாவில் தங்கி உள்ளனர்.

அகதிகளிற்கும் நாடற்றோரிற்குமான பயண பத்திரத்திற்கான விண்ணப்ப படிவம் கடந்த ஆண்டு டிசம்பர் 16ல் இருந்து £21ல் இருந்து £28 ஆகி இருக்கிறது.

## நாடு கடத்தும் திட்டம்:

அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் தம் நாடுகளில் குற்றம் இழைக்கும் குற்றவாளிகளை அவர்களுடைய நாட்டிற்கே திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ள எண்ணி உள்ளதாக தெரியவருகிறது. இதன் படி இங்கு பிரஜா உரிமை பெற்றவர்கள் கூட அவ் உரிமை இரத்து செய்யப்பட்டு அனுப்பப்படலாம் என தெரியவருகிறது. அப்படி அனுப்பப்படுபவர்களின் விபரங்கள் சர்வதேச பொலிஸ் தாபனமான இன்ரபோல் போன்ற அமைப்புகளிற்கு வழங்கப்படும். இத் திட்டம் பின்னர் ஏனைய நாடுகளிற்கும் விஸ்தரிக்கப்படலாம் என நம்பப்படுகிறது. எப்போது இத் திட்டம் நடைமுறைக்கு வரும், எப்போது தமிழ் காடையர்களும் கிரிமினல்களும் தண்டிக்கப்படுவார்கள் என ஆவல்பட்டார் ஓர் தமிழ் பெரியவர். அகதி தஞ்சம் கோரிவந்து இங்கு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட கென்யா நாட்வரிற்கு அவரை திருப்பி அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் திருப்பி அனுப்பப்படவில்லை. அதே நபர் இப்போது ஓர் பெண்மீதும் சிறுவன் மீதும் பாலியல் வல்லுறவு புரிந்து உள்ளான். பாதிக்கப்பட்ட பெண் அவனை உள்துறை அமைச்சு நாட்டைவிட்டு வெளிறேற்றாததற்கு எதிராக நஸ்ட்ட ஈட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளார். இவ் வழக்கை தொடர்ந்து வெளிநாட்டு குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரியவருகிறது.

## நம்பிக்கை மோசடி:

கிழக்கு இலண்டனில் உள்ள ஸ்ரற்போர்ட், பிளெய்ஸ்ரோ ஆகிய இடங்களில்; தம்மிடம் அதித சக்தி இருப்பதாக கூறி மக்களை ஏமாற்றி வந்த போலி (ஆ)சாமிகள் அம்பலப்படுத்தப்பட்டு உள்ளனர். அரச உதவி பெற்று வந்த ஆபிரிக்க, ஆசிய இனங்களை சேர்ந்த இருவர் தம்மிடம் அதித சக்தி இருப்பதாக விளம்பரப்படுத்தி; சாஸ்திரம் சொல்லல், நோய் தீர்த்தல், பிரச்சனைகளிற்கு தீர்வு.......போன்ற ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு இருந்தனர். கடந்த வாரம் புலனாய்வு பத்திரிகையாளர்கள் இவர்களிடம் சாதாரணமானவர்களாக சென்று, அவ் இரு போலிகளையும் அம்பலப்படுத்தி உள்ளனர். அவ் ஆசாமிகள் தம்மிடம் வருபவர்களிடம் இருந்து எவ்வளவு பணம் பறிக்க முடியுமோ, அவ்வளவையும் பறிக்க முயற்சிக்கின்றனராம்; என அப் புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். முதலில் £400 கட்டணம் பேசி பின் குறைத்து குறைத்து இருப்பதை கொடுத்து விட்டு மிகுதியை அடுத்த தடவை வரும் போது கொண்டுவரும் படி கூறி உள்ளனர்.

## பராகுவேயில்.....

நிலைக்கு ஆளாகி இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. இப்படியான கடத்தலின் போது சில சமயங்களில் மரணமும் சம்பவிக்கலாம் என மேற்குறிப்பிட்டது போன்ற வழியாக, சில ஆண்டுகளிற்கு முன் ஜேர்மன் ஊடாக பிரான்ஸ் வந்த கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த சிவா என்பவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இப்படியான நாடு கடக்கும் முயற்சி ஒன்றில் தம்முடன் பயணித்த இளம் பெண் இடையே மரணம் அடைந்ததாகவும், அது பொலிஸ் விடயம் ஆகும் என பயந்து முகவரின் சொற்படி பனி குளியில் புதைத்து விட்டு வந்ததாகவும் கூறினார். அப் பெண்ணுடைய உறவினருக்கு செய்தி சொல்லப்பட்டதா என கேட்டதற்கு, சொல்லி இருக்கமாட்டார்கள் என கூறினார்.

செக் குடியரசின் ஓர் எல்லையான ஸ்லோவாக்கியாவில் கடந்த ஆண்டு 80 இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளை சேர்ந்தோர் தஞ்சம் கோரி இருப்பதாக அந்நாட்டு உள்ளக குடிவரவு அமைச்சர் தெரிவித்து உள்ளார்.

## தலைதூக்கும் இனவாதம்

ஆஸ்திரியாவின் கூட்டாட்சி அரசில் ஜோர்ஜ் ஹெய்டரின் மிகவும் வலதுசாரி கொள்கை உடைய சுதந்திர கட்சியும் அங்கம் வகிக்கிறது. இக் கட்சி வெளி நாட்டவரிற்கு எதிராக குரல் எழுப்புவதுடன்; கிட்லரின் (கிட்லரும் ஓர் ஆஸ்திரியர் என்பது குறிப்பிடத்தக்கது.)




கொள்கைகளை தாம் கடைப்பிடிக்க போவதாகவும் முன்பு அறிவித்து இருந்தது. அமைந்து உள்ள கூட்டாட்சியில் இவ் வலதுசாரி கட்சி பங்கு பெறுவதன் மூலம்; ஐரோப்பிய ஒன்றியத்திலும் அது அங்கம் வகிக்கும். இது ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள வலதுசாரி அமைப்புகளிற்கும் (பிரித்தானிய British National Party) ஊக்கம் ஊட்டும் என அஞ்சப்படுகிறது. ஆஸ்திரியா ஹெய்டரையும் அவர் கட்சியையும் ஒதுக்கி வைக்க வேண்டும்; இல்லையேல் சர்வதேச சமூகம் ஆஸ்திரியாவை உலக அரங்கில் இருந்து விலக்கி வைக்க வேண்டும்; என்று சர்வதேச சமூகம் குரல் எழுப்பி வருகிறது.

ஹெய்டரை ஒஸ்திரியாவின் கூட்டாச்சி அரசில் இருந்து அகற்ற கோரி, 19ம் திகதி ஒஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவில் 150,000 மக்கள் கலந்து கொண்ட மாபெரும் பேரணி இடம் பெற்றது. இதில் ஐரோப்பா முழுவதும் இருந்து மக்கள் கலந்து கொண்டனர்.

## சாதுரியமான இலத்திரனியல் மட்டை

பிரான்ஸ் நாட்டில் உள்ள 35 மில்லியன் இலத்திரன் மட்டைகளின் (credit cards) இரகசிய இலக்கங்களை (PIN numbers) பெறும் வகையில் ஓர் சாதுரியமான இலத்திரன் மட்டையை, எண்களின் குறியீட்டு முறையை பயன்படுத்தி தயாரித்தார்; சேர்ஜ் கம்பிச் என்ற 36 வயதான கணணி நிபுணர். இம் மட்டையின் மூலம் 10 பயண சீட்டுக்களை வெவ்வேறு காசகங்களில் இருந்து கட்டுப்பாட்டாளர்கள் கண்டுபிடிக்காத வகையில் எடுத்து தன் சாதுரிய இலத்திரன் மட்டையின் திறனை நிருபித்தார். மேலும் தனது இந்த கண்டுபிடிப்பிற்கு £20 மில்லியன் சன்மானம் வழங்கும் படி விசா நிறுவனத்தை கேட்டு இருந்தார். ஆனால் அந் நிறுவனம் அந்த தவறை கண்டு பிடித்த வரை கைது செய்வித்தது. திரு கம்பிச் தனது கண்டு பிடிப்பை இலத்திரன் வலையில் பிரசுரித்திருந்தால் வங்கி நடைமுறைக்கு டசின் நிக்லீசன்களால் ஏற்படக் கூடிய பாதிப்பிலும், அதிகம் பாதிப்பு ஏற்பட்டு இருக்கும் என வங்கி ஆய்வாளர்கள் கூறி உள்ளனர்.

ACCOMMODATION ROOMS available
for NON-SMOKER & NON-DRINKER
Independent / Shared
in
Edgware
(With Car-parking facility)
Contact: 0181-952 5677
0181-903 7799
07775 786 371

## உங்கள் தலை Bell Dome ஆகிறதா?

Mereck Sharp & Dohme என்ற நிறுவனம், Propecia என்ற புதிய மாத்திரையை பிரித்தானியாவில் அறிமுகப்படுத்த உள்ளது. இம் மாத்திரை மீண்டும் தலை முடியை கணிசமான அளவு முளைக்க தூண்டும் என மருத்துவ ஆய்வுகள் தெரியப்படுத்தி உள்ளன. 1998ல் அமெரிக்காவில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த மாத்திரை; இன்று 38 நாடுகளில் 800,000 பேரால் பயன்படுத்தப்படுகின்றது. 18 தொடக்கம் 41 வயது வரையான 1,879 பேரை வைத்து மேற்கொண்ட பரிசோதனையில், 86% பேரிற்கு முடி கொட்டுவது கட்டுப்படுத்தப்பட்டு அல்லது முடி முளைத்து உள்ளது. 3.1% ஆனோரிற்கு அவர்களின் பாலியல் தூண்டல் பாதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இது நிரந்தரமான பக்க விளைவு அல்ல. மாத்திரை பயன்படுத்துவது நிறுத்தப்பட்டவுடனோ அல்லது பயன்படுத்திக் கொண்டு இருக்கும் போதோ குறுகிய காலத்தில் இவ் விளைவு அகன்றுவிடும் என்று இம் மாத்திரையை அறிமுகப்படுத்தும் நிறுவனம் உறுதி செய்கிறது.

வைத்தியரின் சிபார்சுடன் உங்கள் சொந்தச் செலவில் நீங்கள் மாத்திரை எடுக்க ஆரம்பிக்கலாம். 28 நாட்களுக்கான மாத்திரையின் விலை £23.24. ஒரு நாளைக்கு ஒரு மாத்திரைப்படி 3-6 மாதங்கள், மாத்திரை எடுக்க வேண்டும். 50% ஆண்களுக்கு வழுக்கை விழும் சாத்தியம் உண்டு. இப்புதிய மாத்திரை ஆண்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என ஆண்களுக்கான உடல்நல சஞ்சிகை கருத்து தெரிவித்து உள்ளது.

SALES PEOPLE WANTED
● Holding an EU or British passport ● Speaking English + native language
● UK driving licence ● Own car an advantage but not essential
Self-employed: Improve your income by increasing your product portfolio. We have exclusive products from Italy, Greece, France:
Wines, Olive oil, Olives, Fish tins, etc.
Employed: Basic salary + generous commission.
Call Alfredo between 10am and 3pm (Mon-Fri) at:
Symposium Food & Drink Ltd Tel: 0181-961 0449

NIRALA
SWEET MAHAL
நல்ல ருசியான இனிப்பு மற்றும் கார வகைகள் தரமான முறையில் மலிவான விலைக்கு கிடைக்குமிடம் நிரளா ஸ்வீட் மகால்.
316 HIGH STREET NORTH, LONDON-E12 6SA
TEL: 0181 548 1303
FAX: 0181 548 1363

இவ் இதழின் வர்த்தக பகுதியை அலங்கரிப்பவர்

# தமிழ் ஆர்வலரும் விளையாட்டு கழக ஸ்தாபகரும் கிழக்கு இலண்டனில் வளர்ந்துவரும் நிதி ஆலோசகருமான திரு.க.இஸ்கந்தமூர்த்தி



"எமது தமிழ் சமூகத்தில் இருந்து, சர்வதேச துடுபாட்ட கழகம் ஒன்றிற்கு, ஓர் துடுப்பாட்டகாரனை என்றாலும் அனுப்ப வேண்டும்."

திரு இஸ்கந்தமூர்த்தி அவர்கள், வெளிப்படையான, நகைச்சுவையான பேச்சாலும் விளையாட்டு ஆர்வத்தாலும் கிழக்கு இலண்டன் தமிழ் இளைஞர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் மிகவும் பிரபல்யம் பெற்றவர். தமிழ் ஆர்வம் கொண்ட இவர் விளம்பரத்தை விரும்பாதவர். இவருடன் உதயன் சார்பில் நிகழ்ந்த சந்திப்பின் சாரத்தை இவ் இதழில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

வணக்கம் திரு இஸ்கந்தா அவர்களே!

வணக்கம் ஜெயபாலன்.

என்ற வழமையான முகமன் கூறலுடன் இச் சந்திப்பு இஸ்கந்தாவினுடைய அலுவலகத்தில் இடம் பெற்றது.

உதயன்: அறிமுகம் தேவை இல்லாதவர் என்றாலும், உங்களை எமது வாசகர்களிற்கு நீங்களே சுருக்கமாக அறிமுகம் செய்து வையுங்கள்.

ஸ்கந்தா: என்னை பற்றி கூறுமளவிற்கு நான் ஒன்றும் பெரிய மனிதர் இல்லை. நான் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியை சேர்ந்தவன். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் யாழ் இந்து கல்லூரியிலும் கல்வி பயின்றேன். 1985ல் உள்நாட்டு கலவரம் காரணமாக, இலண்டனிற்கு தஞ்சம் கோரி வந்தேன். இப் போது திருமணமாகி ஓர் குழந்தையும் உண்டு.

உதயன்: இங்கு வரும் போது உங்களிடம் ஏதாவது நோக்கம், திட்டம் இருந்ததா? அந் நோக்கத்தை அடைந்தீர்களா?

ஸ்கந்தா: இங்கு வந்து சேர வேண்டும் என்பது தான் முதலில் இருந்தது. பின்னர் எனது கல்வியை தொடர விரும்பினேன். அதன் படி BSe Hons in Maths பட்டத்தை பெற்றேன்.

உதயன்: இப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லுங்களேன்:

ஸ்கந்தா: எனது தொழில் என்று பார்த்தால் நான் நிதி ஆலோசகராக உள்ளேன். காப்புறுதி திட்டங்களை மக்களிடையே அறிமுகப்படுத்துவது, வீடு வாங்குதல் போன்ற முதலீட்டு திட்டங்களிற்கு ஆலோசனையும் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பது என்பன எனது தொழிலிற்குள் அடங்கும். அதனை தவிர விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துவது போன்றவற்றிலும் ஈடுபடுவேன்.

உதயன்: நீங்கள் பட்டம் பெற்றது கணித துறையில். அடுத்தபடியாக இலண்டன் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் கற்று; பயிற்சி ஆசிரியராகவும் இருந்து உள்ளீர்கள். அப்படி இருக்கையில் எப்படி நீங்கள் வர்த்தக துறைக்கு மாறினீர்கள். ஆச்சரியமாக உள்ளதே.

ஸ்கந்தா: நான் ஆரம்பகாலத்தில் ஆசிரியராக சில காலம் இருந்தேன். ஆனால் இங்கு உள்ள மாணவர்களின் பழக்க வழக்கங்களுடன் என்னால் ஒத்து போக முடியவில்லை அதனால் அந்த தொழிலில் ஆர்வம் குன்றிவிட்டது. இதற்கிடையே நான் வீடு வாங்க முயற்சித்த போது ஓர் ஆசிய நாட்டவர் காப்புறுதி மட்டும் செய்துவிட்டு தான் காப்புறுதி செய்ததற்கான முகவர் தொகையை (commision) எடுத்து விட்டு இரண்டு ஆண்டுகள் என்னை ஏமாற்றினான். அப்போது தான் நான் ஓர் முதலீட்டு ஆலோசகராக வர வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது. அப்படியே இன்று வந்து விட்டேன். இதன் மூலம் எனக்கு ஏற்பட்ட நிலை இன்னும் ஒருவருக்கு ஏற்படக் கூடாது என்பதற்காக என்னால் ஆன ஆலோசனைகளை வழங்குகிறேன்.

உதயன்: உங்கள் உறுதி நிச்சயம் ஒவ்வொருவருக்கும் இருந்தால்; கீழே விழும் போதெல்லாம் ஆர்த்து எழுந்து வாழ்வில் முன் நிலைக்கு வந்துவிடுவார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக நீங்கள் நிதி ஆலோசகராகவும் வீட்டு முதலீட்டு முகவராகவும் உள்ளீர்கள். இன்று உங்களுடைய வளர்ச்சியை எப்படி எம் உடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள்:

ஸ்கந்தா: இன்னும் நிறைய வளர இடம் உள்ளது. ஆனால் நிச்சயமாக ஆரம்பத்திலிருந்ததை விட பல வழிகளிலும் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. எனது வருமானத்தின் மூலம் என் வளர்ச்சியை அளந்தால் 25% எனது வருவாய் வளர்ந்து உள்ளது. அப்போது என்னிடம் சில பத்து உறுப்பினர்களே இருந்தனர். இப்போது 150 தொடக்கம் 200 பேர் வரை உள்ளனர்.

உதயன்: உங்கள் கடந்த கால அனுபவங்களையும் புள்ளி விபரங்களையும் வைத்து தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் முதலீடுகளில், குறிப்பாக வீட்டில் முதலிட்டு உள்ளார்கள் என்று கூற முடியுமா?

ஸ்கந்தா: இது மிகவும் சிக்கலான ஆனால் அவசியமான கேள்வி. இங்கு தமிழ் மக்கள் பற்றிய புள்ளி விபரங்கள் எதிலும் இல்லை. இங்கு சமூக ஆய்வுகள் தேவைப்படுகின்றன. என்னிடம் வருபவர்களை வைத்து கணித்தால் 20% ஆல் முதலீட்டாளர்கள் தொகை அதிகரித்து உள்ளது.

உதயன்: இப் போது வீட்டில் முதலீடு செய்ய இது உகந்த தருணமா? ஏன்?

ஸ்கந்தா: இதனை எதிர்வு கூறுவது மிகவும் சிக்கலானது. எனது சொந்த அபிப்பிராயத்தை தருகிறேன். இந்த ஆண்டு வரை வீடு விலை ஏறி கொண்டே இருக்கும். காரணம் தேசிய வீட்டு வாரியம் இவ் ஆண்டிற்கு தேவையான அளவு வீடுகளை கட்டாதது, வியாபார நோக்கில் வீடுகளை வாங்கி வாடகைக்கு விடுவோர் அதிகரித்து இருப்பது, இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து பணம் கொண்டு வந்து முதலீடு செய்ய வரி சலுகைகள் வழங்கப்பட்டமை போன்றன அடங்கும். ஆனால் வீட்டு விலை வீழ்ச்சி அடைய சந்தர்ப்பம் இல்லை. வட்டிவீதம் அதிகரித்தாலும் வீட்டு வாடகை வீட்டு கடனிலும் (mortgage) அதிகமாக இருப்பதால் வீட்டில் முதலீடு செய்வது அதிகரித்தே செல்லும்.

உதயன்: தொழில்ரீதியில் உங்கள் எதிர்கால திட்டம் என்ன?

ஸ்கந்தா: என்னிடம் இப்போது உள்ள உறுப்பினர் எண்ணிக்கையை இரட்டிப்பு செய்வது.

உதயன்: வேறு சில திட்டங்களை பகிர்ந்து கொண்டார். ஆனால் அவற்றை இப்போது பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டு கொண்டதால்; அவற்றை இங்கு குறிப்பிடவில்லை.


உதயன்: நீங்கள் தமிழ் பாடசாலை அதிபராகவும் ஆசிரியராகவும் இருந்திருக்கின்றீர்கள். இதிலிருந்து இலண்டனில் தமிழ் கல்வியையும் கலையையும் எப்படி கற்பிக்க முடியும் என்று கூறுங்கள்:

ஸ்கந்தா: இங்கு உள்ள சூழலில் தமிழ் கற்பிப்பது சற்று கடினம். பிள்ளைகளிற்கு இலக்கணம் கற்று கொடுப்பது இன்னும் கடினமாக இருக்கும். குழந்தைகளை தமிழ் வாசிக்கவும் பேசவும் கற்று கொடுக்க வேண்டும். அது தான் முக்கியமானது. அடுத்து கலையை பார்த்தால் சமூக அந்தஸ்திற்காக தம் பகட்டுத்தனத்தை காட்ட அரங்கேற்றம் வரை கற்று விட்டு பின் கைவிடுவதில் எந்த பயன்பாடும் இல்லை. அப்படியான கலை கற்பித்தல்கள் அவசியம் அற்ற ஒன்று. கலையை சமூக தேவையுடனும் தமது எதிர்காலத்தில் கொண்டு செல்ல கூடியதாகவும் கற்பித்தலும் கற்றலும் வரவேற்கத்தக்கது. மேலும் பெற்றோர்கள் கற்பித்தலில் தலையிட்டு தன் குழந்தை தான் எல்லாவற்றிலும் முன்னிற்க வேண்டும் என்று மற்றய குழந்தைகளுடன் ஒப்பீடு செய்து சர்ச்சைப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் சக குழந்தைகளிற்கு இடையேயும்; குழந்தைகளிற்கும் ஆசிரியரிற்கும் இடையேயும் நல்ல உறவு ஏற்படாது. அது குழந்தைகளின் கற்றலை பாதிக்கும்.

உதயன்: வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு உள்ள உங்களிற்கு இவற்றில் மிகவும் பிடித்தது எது? ஏன்?

ஸ்கந்தா: விளையாட்டு துறை குறிப்பாக துடுப்பாட்டம். நான் எனது பள்ளி பருவத்தில் இருந்து இதில் ஈடுபாடு கொண்டு உள்ளேன். யூனியன், இந்து கல்லூரிகளிலேயே துடுப்பாட்ட விளையாட்டுக்களை முன் நின்று ஒழுங்கு செய்வேன்.

உதயன்: விளையாட்டு துறையில் யாழ் இந்து கல்லூரியில் இருந்து இலண்டன் வரை மிகுந்த ஈடுபாடுடையவர் என்பது சம்பந்தப்பட்ட அனைவரும் அறிந்தது. இலண்டனில் தமிழ் விளையாட்டு துறையில் உங்கள் பங்களிப்பு என்ன? அதனை



ஊக்குவிப்பதன் நோக்கம் என்ன?

ஸ்கந்தா: எமது இளயவரிற்கு ஓர் களத்தினை ஏற்படுத்தி கொடுப்பது தான் எனதும் என் சார்ந்தவர்களதும் நோக்கம். அந்த நோக்கத்தில் தான் 8 ஆண்டுகளிற்கு முன், யாழில் இருந்த 'உதய தாரகை விளையாட்டு கழகம்' இலண்டனிலும் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது 12 விளையாட்டு குழுக்கள் அங்கம் வகித்தன. இப்போது 34 விளையாட்டு குழுக்கள் அங்கம் வகிக்கின்றன. எமது சுற்று போட்டிகள் ஏப்ரல் முடிவில் இருந்து ஒவ்வோர் ஞாயிறும் நடைபெறும்.

உதயன்: விளையாட்டு துறை தொடர்பாக உங்கள் எதிர்கால திட்டம் என்ன?

ஸ்கந்தா: எமது தமிழ் சமூகத்தில் இருந்து, சர்வதேச துடுபாட்ட கழகம் ஒன்றிற்கு, ஓர் துடுப்பாட்டகாரனை என்றாலும் அனுப்ப வேண்டும்; இது எனது திட்டம் மட்டுமல்ல இலக்கும் கூட. எந்த ஓர் அரசியல் தலையீடும் இல்லாத போது நிச்சயம் அதனை அடைய முடியும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உண்டு. மேலும் சுற்று போட்டிகள் முடிவுற்றதும் தமிழ் நாட்டிற்கு, கழகம் ஓர் சுற்று பயணத்தை மேற் கொள்ள திட்டமிட்டு உள்ளது.

உதயன்: உங்கள் இலக்கு நிச்சயம் நிறைவேற வேண்டும் என்று என்சார்பிலும் நிர்வாகத்தினர் சார்பிலும் மனதார வாழ்த்துகிறேன். அந்த தமிழ்ச் சர்வதேச விளையாட்டு வீரன் விளையாடும் செய்தியை தாங்கி வர உதயன் காத்திருக்கிறது.

உதயன்: இறுதியாக, வாழ்வில் ஒன்றை சாதிக்க துடிப்பவர்களிற்கும் வாழ்வில் முன்னேற துடிப்பவர்களிற்கும் என்ன கூற விரும்புகிறீர்கள்:

ஸ்கந்தா: ஒன்றை செய்ய விளையும் போது அபரிதமாக சிந்தித்து குழப்பம் அடையாமல்; அளவோடு சிந்தித்து தெளிவுடன் செய்யுங்கள்.

இந் நேர்முகத்திற்கு எமக்கு நேரத்தை ஒதுக்கி தந்ததற்கு நன்றி கூறி விடைபெற்றேன். திரு இஸ்கந்தமூர்த்தி அவர்களும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள களம் ஏற்படுத்தி தந்தமைக்கு நன்றி தெரிவித்து கொண்டார். அவரிடம் காப்புறுதி, வீட்டு முதலீடு பற்றி ஆலோசனை பெற விரும்பினால் (0961 364 918) என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். எமக்கு எழுதி அனுப்பினாலும் நாம் சம்பந்தப்பட்டரிடம் ஆலோசனை பெற்று தருவோம்.

PHONE CHOICE
NOW OPEN!
FREE PHONE!
✱ FREE CONNECTION
✱ FREE VOICE MAIL
✱ FREE ITEMISED BILL
✱ FREE CALLS EVE / W-END
✱ FREE CASE
✱ FREE CAR CHARGER
✱ FREE HANDSFREE
NEC DB 2000

ONLY £15 PER MONTH
10P DAYTIME CALLS
2P EVE / W-END LOCALS
NATIONAL CALLS
SUBJECT TO 12 MONTH CONTRACT
PRE PAY
✱ NO - BILLS
✱ NO - CONTRACTS
✱ NO - EXPIRY DATE
ONLY £49.99
JUST PAY AS YOU GO!
CALL NO. 0208 904 88 44
183 EAST LANE, NORTH WEMBLEY, MIDDX. HA0 3NE

# பார்வை குறைபாட்டிற்கு புதிய அரிசி?

தென் கிழக்கு ஆசியாவில் மட்டும் ஒவ்வோர் ஆண்டும் 250,000 குழந்தைகள் பார்வை இழக்கின்றனர். இதற்கு விற்றமின் A பற்றா குறையே பிரதான காரணமாகும். இப் பொழுது அமெரிக்கா, சுவிஸ், ஜேர்மன் நாட்டு விஞ்ஞானிகள் பரம்பரையியல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி; விற்றமின் A ஐ உற்பத்தி ஆக்கும் 3 பரம்பரையியல் அலகுகளை அரிசியினுள் செலுத்தி வெற்றி கண்டு உள்ளனர். இப் போது பரிசோதிக்கப்பட்டு வரும் பயிர்களின் இன விருத்தி முற்று பெற்றதும் புதிய இன நெல் விதைகள் சந்தைக்கு வரும்.

மேற்கு நாடுகளில் பரம்பரையியல் தொழில் நுட்பத்தின் ஊடாக உருவாக்கப்படும் உணவு பொருட்களிற்கு எதிரான கோசங்கள் ஓங்கி ஒலிக்கையில் விஞ்ஞானிகளிற்கு இக் கண்டு பிடிப்பு சற்று ஆறுதல் அளித்து உள்ளது. ஆனால் இந் நெல் இனம் ஏற்படுத்த கூடிய பக்க விளைவுகள் பற்றியோ, மெல்ல நுழையும் பரம்பரையியல் வடிவமைக்கப்பட்ட விதைகள் அந் நாட்டு மக்களின் பொருளாதாரத்தில் என்ன தாக்கம் ஏற்படுத்தும், என்பது பற்றியோ மூன்றாம் உலக அரசுகள் சிந்திக்குமா?

# கேள்விக்கு உள்ளாகும் 1951 உடன்பாடு

## அடுத்த கட்டம் என்ன?

(16 பெப், இலண்டன்)

கடத்தப்பட்ட அப்கானிஸ்தான் விமானம், சர்வதேச அகதிகள் வருகையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி உள்ளது. ஐம்பது ஆண்டுகளிற்கு முன் கழுதையில் பிச்சை பாத்திரம் ஏந்தி வந்தவர்கள்; இப்போது ஜம்போ ஜெற்றில் நூற்று கணக்கில் வருகிறார்கள்; இதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என உள்துறை அமைச்சினுள் பேசப்படுவதாக டெய்லி ரெலிகிறாவ் செய்தி வெளியிட்டு உள்ளது. உள்துறை அமைச்சரிற்கு பல வழிகளிலும் நெருக்குதல்கள் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இங்கு வெளிவரும் தேசிய சிறு பத்திரிகைகள் கடுமையான வாதங்களை வைக்கின்றன. சில செய்திகள் வரம்பு மீறி இனவாத கருத்துக்களாகவும் அமைந்து உள்ளது.

இதனை தொடர்ந்து உள்துறை அமைச்சர் அடுத்த கட்ட நடவடிக்கை ஒன்றிற்கு தன்னை தயார் செய்து வருகிறார். அகதிகள் விடயத்தில் மேலும் இறுக்கத்தை கொண்டுவர அவர் விளைந்து உள்ளார். ஐம்பது ஆண்டுகளிற்கு முன் ஏற்று கொண்ட உடன்பாட்டை திருத்தி அமைக்க அவர் குரல் எழுப்பி உள்ளார். அவருடைய குரலிற்கு பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகியன உடனடியாக ஆதரவு தெரிவித்து உள்ளன. இதற்கு மேலும் பல நாடுகள் ஆதரவு வழங்கும் என தெரிகிறது.

வரும் மார்ச் 27ல் புறுசல்ஸில் நடைபெற உள்ள, the European justice and internal affairs Council ன் சந்திப்பில் இது முக்கிய விடயமாக இருக்கும் என தெரிய வருகிறது. கடந்த ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பொதுவான குடிவரவு கொள்கைகளையும் கட்டமைப்பையும் கொண்டு வர இணக்கம் காணப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. ஜேர்மனிக்கு அடுத்து பெரிய தொகையான அகதிகளை ஏற்கும் பிரித்தானியா; தன் வாயில் கதவுகளை இறுக்கி மூட அனைத்து பிரயத்தனங்களையும் மேற்கொள்கிறது.

# கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது

## 5 ஊடகவியலாளர்கள் கொலை

(02 பெ, நியுயோர்க்)

ஊடகவியலாளரிற்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக CPJ Commette to Protect Jurnalists அமைப்பு அரசை கண்டித்து கடிதம் எழுதி உள்ளது. அத்துடன் எதிர் காலத்தில் இப்படியான சம்பவங்கள் ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டு உள்ளது. மேலும் ஜனாதிபதி சந்திரிகா தன்னை கொல்ல சில செய்தி அமைப்புகள் திட்டமிட்டதாக, அரச செய்தி ஊடகங்கள் மூலம் பிரச்சாரப்படுத்தி இருக்கிறார். இது செய்தியாளர்களை மலினப்படுத்தவும் அவர்களை ஒதுக்கிவைக்கவும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை; என Article 19 அமைப்பு அரசிற்கு அனுப்பி வைத்து உள்ள மடலில் கூறி உள்ளது. மேலும் அரசு தனக்கு எதிரான செய்திகள் வராமலிருக்க பத்திரிகை தணிக்கை மேற் கொள்வதை கண்டித்து இருப்பதுடன்; பத்திரிகை தணிக்கையை நீக்கும் படியும் கேட்டு உள்ளது.

வட இலங்கை மக்களின் புத்தாண்டு கொண்டாட்டங்களின் ஒலிபரப்பை மேற்கொள்ள, வவுனியா சென்ற அந்தோனி மரியநாயகம் அவர்கள், சென் அந்தோனி தேவாலயத்தின் முன் புதிய நூற்றாண்டு பிறப்பதற்கு 2 மணித்தியாலங்களிற்கு முன் ஆயுதம் ஏந்திய விடுதலை புலியினால் சுட்டு கொல்லப்பட்டார். இச் செய்தி கடந்த ஆண்டிற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற எல்லைகள் அற்ற மருத்துவர் அமைப்பினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டு உள்ளது. இவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சுதந்திர செய்தியாளர் என்பது குறிப்பிடத்தக்கது. ஊடகவியலாளர்களிற்கு மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இப்போது இலங்கையும் உள்ளது.

இவருடைய கொலையுடன் கடந்த நான்கு மாதங்களில் கொல்லப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்து உள்ளது. செப்ரம்பர் 9ல் சன்தான பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ரோகன குமார, நவம்பர் 2ல் தினமுரசு ஆசிரியர் அற்புதன் நடராஜா ஆகியோர் சுட்டு கொல்லப்பட்டனர். டிசம்பர் 18ல் ஜனாதிபதி சந்திரிகா மீதான தற்கொலை தாக்குதலின் போது மகாராஜா தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் இந்திரிகா பத்னிவாசன், சுதந்திர தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் அனுரா பிரியந்த ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர்.

CPJ Commette to Protect Jurnalists : இவ் அமைப்பானது செய்தியாளர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த நிறுவப்பட்ட சுதந்திர அமைப்பாகும். இதன் தலைமையகம் நியுயோர்க்கில் உள்ளது. இவர்கள் ஆண்டுதோறும் செய்தியாளர்களின் பாதுகாப்பு பற்றிய அறிக்கையை வெளியிடுவார்கள். 98ல் 17 நாடுகளில் 24 செய்தியாளர்கள் கடமையின் போது கொல்லப்பட்டனர். 99ல் 10 நாடுகளில் 33 செய்தியாளர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். கடந்த ஆண்டு சியரலியோன் என்ற மேற்கு ஆபிரிக்க நாட்டில் மட்டும் 10 செய்தியாளர்கள் கடமையின் போது கொல்லப்பட்டனர்.

Article 19 : தணிக்கைக்கு எதிரான சர்வதேச அமைப்பு.

ஐக்கிய நாடுகள் சபையின் 1948 டிசம்பர் 10 மனித உரிமைகள் பிரகடனத்தின் 19ம் பிரிவு தான் இந்த Article 19 - Everyone has the right to freedom of opinions and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of fontiers.

# அரசியல் காடையர்களின் வெறியாட்டம்

## 3 பல்கலைக்கழக மாணவர்கள் பலி

(02 பெப், சென்னை)



தமிழக சரித்திரம் காணாத, பெரும் ஊழல் புரிந்தவராக கணிக்கப்படும் ஜெயலலிதாவிற்கு எதிராக வழங்கப்பட்ட, தீர்ப்பிற்கு எதிராக தமிழகம் முழுவதும் சிறுசிறு குழப்பங்களும் போக்குவரத்து தடைகளும் அண்ணா திமுக தொண்டர்களினால் ஏற்படுத்தப்பட்டது. இதன் ஓர் கட்டமாக சென்னை நீதிமன்றத்தின் முன் குழப்பம் விளைவித்த 1000 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் தற்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியின் இல்லத்திற்கு முன் குழப்பம் செய்ய முயன்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இக் குழப்பங்களின் உச்சமாக தர்மபுரியில் வெறிபிடித்த அ.திமு.க காடையர்கள் தமிழக மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் 50ற்கும் அதிகமான பேருந்து வண்டிகளிற்கு தீயிட்டு கொழுத்தினர். இக் காடையர் கூட்டம் பயணிகளுடன் சேர்த்து வைத்து தீ மூட்டியதில் 3 பல்கழைக்கழக மாணவர்கள் துடிதுடித்து கருகி போயினர். வளமிக்க எதிர் காலத்திற்காக தம் இளமையை செப்பனிட்ட இம் மாணவர்கள், தமிழகத்திலும் இந்தியாவிலும் புரையோடி கிடக்கும் அரசியல் வெறிக்கு மேலும் ஓர் சாட்சியாக்கப்பட்டு உள்ளனர். இத் தீ விபத்தில் மேலும் 5 பேர் காயப்பட்டனர். ஒற்றை ரூபாய் வருமானத்தில் பல மில்லியன் பெறுமதியான சொத்து சேர்த்த முன்னால் தமிழ் நாட்டு முதல் அமைச்சரிற்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு முதல் தடவையாக நிருபிக்கப்பட்டு ஓராண்டு கடின உழைப்பு செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இத் தண்டனை மார்ச் மாதம் 3ம் திகதி வரையும் பிற்போடப்பட்டு உள்ளது. அதற்குள் குற்றவாளிகளாக காணப்பட்ட ஜெயலலிதாவும் அவரது அமைச்சர் அவையில் பங்கு பற்றிய T.N செல்வகணபதியும் இவர்களுக்கு ஒத்தாசையாக இருந்த மேலும் 4 அதிகாரிகளும் விரும்பினால் மேன்முறையீடு செய்ய முடியும். ஆனால் இத் தண்டனை ஜெயலலிதாவை தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்வதில் இருந்து தடுக்காது. ஜனவரி 26ல் தனது 50 குடி அரசு தினத்தை கொண்டாடிய இந்தியா, தான் சென்று கொண்டிருக்கும் பாதையை பற்றி இப்போதே சிந்திக்க வேண்டும். சில ஆண்டுகளிற்கு முன் வரை தமக்கு தாமே தீமூட்டிய காலம் போய் இப்போது மற்றவர்களிற்கு தீ வைக்கும் அளவிற்கு இந்திய தமிழக அரசியல் வெறியும் காடைத்தனமும் வளர்ந்து உள்ளது.

# பிரித்தானிய பெண் மீது

## இந்தியாவில் பாலியல் பலாத்காரம்

(30 ஜன, கோவா)

இந்தியாவின் கோவா மாநிலத்திற்கு சுற்றுலா பயணம் சென்றிருந்த Joleen Skethle(22) அங்கு உள்ள கடற்கரை குடிபானகத்தில், போதை பொருள் ஊட்டப்பட்டு, வெளியே அழைத்து செல்லப்பட்டு பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார். தனது காதலனுடன் விடுமுறையை கழிக்க வந்தவர் சம்பவத்திற்கு மறுதினம் தனது காதலனையே மணம் முடிக்க இருந்ததாக தெரிவித்தார். தன்னுடன் நட்பாக வந்து கதைத்து ஆறு பேர், தன்னை தங்களுடன் துணையாக மது அருந்தும் படி விடுத்த வேண்டுகோளை மறுக்க முடியாமல் ஏற்றதாகவும்; அப்போது தான் அவர்கள் போதைமருந்தை கலந்து இருந்ததாகவும் ஜோலீன் தெரிவித்தார்.

தான் போதை மருந்தின் தாக்கத்தால் நினைவு இழந்து கொண்டிருக்கையில் தன்னை ஒதுக்கு புறமாக அழைத்து வந்து ஒருவர் மாறி ஒருவராக அறுவரும் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதாக தெரியவருகிறது. மேலும் அவ் வெறியர்கள் தடி, போத்தல் என்பவற்றை அப் பெண்ணின் உடல் மீது செலுத்தியதில்; அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாக ஜோலீனை மீட்ட சக சுற்றுலா பயணிகள் தெரிவித்து உள்ளனர். இவை எல்லாவற்றையும் உறுதிப்படுத்திய ஜோலீன் அவர்கள் மனிதாபிமானமே இல்லாத மிருகங்களாக நடந்ததாகவும்; மாறி மாறி ஒருவர் பலாத்காரம் செய்யும் போது ஏனையோர் கை தட்டி ஆரவாரப்பட்டதாகவும் தன்னை சித்திரவதை செய்து மகிழ்ந்ததாகவும் கூறி இந்தியாவிற்கு செல்லும் சுற்றுலா பயணிகளிற்கு எச்சரிக்கையும் செய்தார். இவரது எச்சரிக்கை பிரித்தானிய பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக வெளியிடப்பட்டது.

இச் சம்பவம் தனி ஒரு சம்பவம் அல்ல. இதே இடத்தில் இதற்கு முன் இரு சுவிஸ் பெண்கள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டனர். ஆனால் விசாரணைகள் வெறும் கண்துடைப்பாகவே அமையும் என அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஒரு மசூதியை உடைக்க 4 இந்துக்கள் தேவைப்பட்டால்;

## 20 மசூதியை உடைக்க எத்தனை இந்துக்கள் தேவை?

(01 பெப், நியு டெல்லி)

இந்தியாவில் நடைமுறையில் உள்ள மதசார்பற்ற கல்விமுறையை அகற்றி இந்துமத பாடத்திட்டத்தை புகுத்தும் முயற்சியில் இந்து கல்வியாளர்கள் ஈடுபட்டு உள்ளனர். இதன் ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. உத்திர பிரதேசத்தில் பரீட்சைதாளில் கேட்கப்பட்ட வினாக்களில் மேலுள்ள தலைப்பு கேள்வியும் ஒன்று. புதிய பாட புத்தகங்களில் இந்துக்கள் அல்லாதோர் வெளிநாட்டவர்களாக காட்டப்படுகின்றனர். மேலும் இந்துக்களின் பழமையான சாதி அமைப்பை சரியானது என கூறுகிறது புதிய பாடத்திட்டம். புதிய பாடத்திட்டங்கள் கல்வியாளர்களால் எழுதப்பட வேண்டுமே அன்றி அரசியல் வாதிகளால் அல்ல. பிஞ்சு உள்ளங்களில் அன்பை விதையுங்கள் நஞ்சை விதைக்காதீர்கள் போன்ற குரல்களும் எழுந்த வண்ணமே இருக்கின்றது.

வாக்கு சேர்க்க பண்டாரநாயக்கா, அயல் நாடான இலங்கையில் கொண்டுவந்த பௌத்த சிங்கள அரசு இன்று எதை அறுவடை செய்கிறது என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல் பாரதிய ஜனதாவின் ஹிந்தி-இந்து-இந்தியா எதை அறுவடை செய்யும் என்பதை அடுத்த 50 ஆண்டுகளில் அனுபவித்து தான் தெரிவார்கள்.

# வேலை இழப்பு

கிழக்கு இலண்டனில் உள்ள போர்ட் நிறுவனத்தின் டக்கனம் கிளையில் 1,500 பேர் வரை குறைப்பு செய்யப்பட உள்ளது. ஐரோப்பா முழுவதற்குமான செலவை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் ஓர் அங்கமாகவே இது மேற்கொள்ளப்பட உள்ளதாக நிறுவனம் கூறுகிறது. மேலும் டக்கனம் கிளையில் அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தங்கள், இன குழப்பங்கள், அதனை தொடர்ந்து ஏற்படும் வழக்குகள் இவற்றின் மொத்த விளைவாக அப் பிரிவு மூடப்படலாம் எனவும் தகவல்கள் வெளிவருகிறது. அப்படி மூடப்பட்டால் 8,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். வேலை குறைப்பிற்கும் மூடுதலிற்கும் எதிராக தாம் உடன் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று தொழிற்சங்கம் நிறுவனத்தை எச்சரித்து உள்ளது.

# புதிய கட்டுப்பாடுகள்

குடும்ப வைத்தியர்கள் மீது புதிய கட்டுப்பாடுகளை அரசு ஏற்படுத்த இருக்கின்றது. ஹரோல் சிப்மனின் தொடர் கொலைகளை தொடர்ந்து; இந்த புதிய விதிகள் நடை முறைப்படுத்த ஏற்பாடாகி உள்ளது.

இதன் படி மரண அத்தாட்சி பத்திர நடைமுறைகளை இறுக்கமாக்கல்; கு.வைத்தியர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றம் சுமத்தப்பட்டு இருந்தால், அதனை பொறுப்பான மருத்துவ அமைப்பிற்கு தெரியப்படுத்தல்; தமது சிகிச்சை நிலையத்தில் ஏற்படும் மரணங்களையும் ஏனைய முக்கிய சம்பவங்களையும் சுகாதார அதிகாரிகளிற்கு அறிவித்தல்; ஒவ்வோர் ஆண்டும் வைத்தியர்களுடைய சேவை பற்றி மதிப்பீடு செய்தல்; சடுதியான மரணங்களை கையாளும் அமைப்புகளின் செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராய்தல் போன்ற நடை முறைகள் அமுலாக்கப்படும் என சுகாதார செயலர் அலன் மில்பர்ன் தெரிவித்து இருக்கிறார்.

Part-Time

# செய்தியாளர்கள் தேவை

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
உதயன்
GEMINI HOUSE
25-27 High Street Edgware, Middx HA8 7EE

**INDIAN RESTAURANT FOR SALE**
30 SEATS
EALING HANGER LANE
15 YEARS LEASE (Renewable)
RENT - £12,000
Rate - £1,500
Contact Name - IQBAL
Tel: 0181 991 2125 / 2122 ans.machine

படித்த சுறுசுறுப்பான

**Representatives**

பத்திரிக்கைகு விளம்பரங்கள் சேகரிக்க தேவை. அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

உதயன்

GEMINI HOUSE 25-27 High Street Edgware, Middx HA8 7EE

# HAPPY TEXT

அதி நவீன வேலைப்பாடுடன் கண்ணை கவரும் 22காரட் சிங்கப்பூர் தங்க நகைகள். தாலிக்கொடி சங்கிலி கைச்சங்கிலி வளையல்கள் மோதிரங்கள். பஞ்சாயுதம் முத்துச்சங்கிலிகள் இன்னும் பல யாவும் மலிவு விலையில்.

இந்தியாவில் தருவிக்கப்பட்ட றியல் காஞ்சிபுரம் பனாறிஸ் பஞ்சாபி சூட்டுகள் சிறிலங்காவில் இருந்து பட்சாரங்கள் ப.கவுன் பிறசியர்கள் சிங்கப்பூர் ரெடிமேட் ஆடை வகைகள் மற்றும் Rice cooker Ana - Digital பிரேசர் மணிக்கூடுகள் கொளோன் வகைகள் இன்னும் பல.

வாருங்கள் வந்து பாருங்கள்!

திங்கள் தவிர்ந்த ஏனையநாட்கள் மத்தியானம் 12 தொடக்கம் 7.30 மணிவரை திறந்திருக்கும்.

பழைய நகைகளை கொடுத்து புது நகைகளை பெற்றுக் கொள்ளலாம்.

**165 UPPER TOOTING ROAD, TOOTING SW TDJ, LONDON**
TEL: 0181 6823958

**3 CLAYTON AVE ALBERTON,**
WEMBLEY 4AO 4JY,
LONDON
TEL: 0181 9030 782
FAX: 0181 903 5119

# Genga & Co. Solicitors

*Administor of Oaths*

SPECIALISTS IN :

**ASYLUM + IMMIGRATION LAW**

**CRIMINAL LAW**
- POLICE STATION
- MAGISTRATE COURT
- CROWN COURT

தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுநர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு வழக்குகள்"
குற்றவியல் வழக்குகள்
"மஜீஸ்டுரட் நீதிதன்றம்"
"உயர் குற்றவியல் நீதிமன்றம்
பொலீஸ் நிலையம்"
எந்தவிதமான அவசரத்தேவைக்கும்
24 மணித்தியால தொடர்பு இலக்கம்

**0956 569 559**

GEM

Genga & Co.
1st Floor, 5 Lancelot Road, Wembley, Middx. HA0 2AJ
DX: 80210 Wembley Central
* E-mail: genga8co.wembley.ic24.net

**Tel: 0208 795 5020**
**Fax: 0208 795 5030**

# PLASWARE

Manufacturers and exporters of Disposable Catering and Party Products

**FOR ALL CATERING, WEDDING AND PARTY REQUIREMENTS**

**WE STOCK:**

- PLAIN AND SECTION PLATES IN PLASTIC AND FOAM
- PLASTIC CLEAR AND FOAM GLASSES AND CUPS
- PLASTIC CUTLERY
- 32 DIFFERENT COLOURED PAPER AND DISPOSABLE LINEN NAPKINS
- MATCHING TABLE COVERS AND BANQUETING TABLE COVER ROLLS
- FOIL PLATTERS AND CONTAINERS, CUPS
- PAPER PLATES AND COATED PAPER PLATES
- PLASTIC AND FOAM BOWLS
- SWEETS AND FOOD PACKING CONTAINERS
- BALLOONS, RIBBONS, CREPE PAPER ROLLS AND SHEETS
- DECORATIONS, FOIL BALLOONS, PARTY POPPERS, PARTY HATS
- BALLOON GAS TANK HIRED OUT AND MANY MORE PARTY DECORATIONS AND PRODUCTS

பார்டி சம்பந்தமான தேவைகளுக்குரிய எல்லாவகையான பிளாஸ்ட்டிக் மற்றும் போம் தட்டுகள், கப்புகள், பளுன்கள், பவல்கள், வாடகைக்கு பளுன் காஸ் டாங்க் மற்றும் இதர பொருட்களை நாங்கள் தயார் செய்து விற்கின்றோம். மேலும் விவரங்களுக்கு கீழ்காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

**WE CAN ALSO PRINT ON BALLOONS AND NAPKINS WITH PERSONAL MESSAGES AND STANDARD STOCK LOGOS**

Come and see our Showroom:
PLASWARE "SAI HOUSE" UNIT3 BOWMAN TRADING ESTATE, WESTMORLAND ROAD (OFF HONEYPOT LANE), KINGSBURY, LONDON NW9 9RL
OPEN MON-SAT: 9.30AM - 7.00PM




**Tel: 0181 206 1292** **Fax: 0181 204 6883**

E-Mail: plasware@plasware-international.co.uk

சமூக அரங்கு:

உதயன்

# சர்வதேச மகளிர் தினம்

## பெண் சமத்துவம் பெற்று விட்டாளா?



மார்ச் எட்டாம் திகதி சர்வதேச பெண்கள் தினம். 143 ஆண்டுகளிற்கு முன் (1857ல்) நியுயோர்க் நகர ஆடை தொழிற்சாலையில் ஆண்களிற்கு சமமான கூலி தமக்கும் வழங்கப்பட வேண்டும்; என்று கோரி வேலையில் இருந்து வெளிநடப்பு செய்து, வெற்றியும் பெற்றனர். இந் நிகழ்வே பெண் சுதந்திரத்திற்கான நீண்ட பாதையின் மைல் கல்லாக அமைந்தது. இதற்கு முன்பும் பெண் சுதந்திரம் பற்றிய கருத்துக்கள் இருந்த போதும் நியுயோர்கில் நிகழ்ந்தது போன்று, அவை அமைப்பு வடிவம் பெறவில்லை. 1910ல் டென்மார்க் தலைநகர் கோப்பன்காகனில் நடந்த 2வது சர்வதேச பெண்கள் மாநாட்டில் முதலாவது பெண்கள் கிளர்ச்சியை நினைவு கூறுமுகமாக மார்ச் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக பிரகடனம் செய்யப்பட்டது.

பெண்கள் வாக்குரிமை அற்ற நிலையில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தார்கள். ஆனால் அந்த நிலை நீங்கிவிட்டது. ஆனால் இன்றும் பெண்கள் மீதான அடக்கு முறை ஒழிக்கப்பட்டு விட்டது என்று சொல்லும் நிலை எந்த நாட்டிலும் எந்த விடுதலை அமைப்பிலும் இல்லை. பெண்கள் மீதான ஒடுக்கு முறை பெரும்பாலான நாடுகளில் குறிப்பாக மேற்கு நாடுகளில் சட்டப்படி நீக்கப்பட்டு உள்ளது. ஆனால் சமூகத்தில் இன்னமும் பெண்கள் மீதான அடக்கு முறை உயிரோட்டமாகவும் வெவ்வேறு வழிகளில் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது.


தமிழ் சமூகமும் பெண் ஒடுக்கு முறையில் சளைத்தது அல்ல. இது பெண்ணிலை வாதம் பற்றிய பிரஞ்ஞை உள்ள அனைவரும் அறிந்த ஒன்று. தமிழ் மக்களிடையே பெண்ணிலை வாதம் என்பது குறிப்பிட்ட ஒரு பிரிவினர் மத்தியில் பேசப்படும் ஓர் விடயமாகவே இன்றும் உள்ளது. கோட்பாட்டு பத்திரிகைகளும் கோட்பாட்டு சஞ்சிகைகளும் மட்டுமே ஓர் குறுகிய வாசகர் வட்டத்திற்குள் தம் பெண்ணிலை வாத கருத்துக்களை வைப்பதால் அது பெரும்பாலான மக்களை சென்றடைவது இல்லை. ஈழத் தமிழ் மக்களிடையே ஊடகவியல் என்பது அதன் முழு வடிவத்திற்கு வர முடியாமல் இருப்பதுவும் இதற்கு ஓர் காரணம். இன்னும் ஓர் காரணமாக வரட்டு வாதத்தையும் குறிப்பிடலாம்.

### சில வரலாற்று குறிப்புகள்:

1857 மார்ச் 8 சம ஊதியம் கோரி முதலாவது பெண்கள் கிளர்ச்சி நியுயோர்க் நகரில் இடம் பெற்றது.
1903 நோபல் பரிசு பெற்ற முதல் பெண் மேரி கியூரி - பௌதீகவியல்
1910 வாக்குரிமை கோரி பெண் தொழிலாளர்கள் போராட்டம் செய்தனர்.
1971 இலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு தலைமை ஏற்ற முதல் பெண் ஆவார்.
1975 சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.
1975 - 1985 பெண்கள் புத்தாண்டாக பிரகடனம் செய்யப்பட்டது.

ஈழத்து பெண்களின் வரலாற்று குறிப்புகள்:

1930 களில் பெண்களிற்கான அரசியல் ஜனநாயக உரிமைகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பவற்றில் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டனர். அவர்களில் குறிப்பானவர்கள் வருமாறு மங்களம்மாள் மாசிலாமணி, மீனாட்சியம்மாள் நடேசையர், நல்லம்மா சத்தியவாகீஸ்வரஜயர், திருமதி தம்பிமுத்து.
1931 மங்களம்மாள் மாசிலாமணி பெண்களது வாக்குரிமைக்கு டொனமூர் ஆணை குழுவில் குரல் கொடுத்தவர். தமிழ் மகள் பத்திரிகையின் ஆசிரியர். சேர் பொன் இராமநாதன் போன்ற தமிழ் தலைவர்கள் பெண்களது வாக்கு உரிமையை மறுத்த போது அவற்றிற்கு எதிராக குரல் கொடுத்தவர். இராமநாதன் போன்றோர் பெண் உரிமை மறுப்பு, சாதிய பற்று போன்ற பிற்போக்கு அம்சங்களை கொண்டிருந்தும் துரதிஸ்டவசமாக யாழ் பல்கழைகழகம் அவரிற்கு சிலை எழுப்பி உள்ளமை; ஈழத்து தமிழ் சமூகம் இன்னமும் தனது பிற்போக்கு சிந்தாந்தங்களில் இருந்து விடுபடவில்லை என்பதனையே காட்டுகிறது.



1970 ஆங்காங்கே அரசியல் அமைப்புகளுடன் இணைந்து வேலைகள் செய்ய ஆரம்பித்தனர்.
1975 யாழ் பல்கலைக்கழகத்தில் பெண்கள் தொடர்பான கண்காட்சி டிசம்பரில் இடம் பெற்றது.
1980 தமிழீழ விடுதலை போராட்டம் தீவிரமான போது குறிப்பாக யாழ் பல்கலைகழகத்தில் இருந்தும் வெளியேயும் பெண் எழுத்தாளர்கள், கலைஞர்கள் உருவாகினர். மேலும் மாணவியர் போராட்டங்களிலும் கலந்து கொண்டனர். திருமதி மதிவதனி பிரபாகரன் அவர்களும் அன்று யாழ் பல்கலைகழக போராட்டங்களில் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.
1985 எண்பதுக்களின் நடுப்பகுதியில் கணிசமான அளவு பெண்கள் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டனர்.
1989 பெண்ணிலை வாதிகளிற்கு எதிராக தமிழீழ விடுதலை போராட்டம் வன்முறையை கையாண்டது. இதற்கு அவர்களுடைய அரசியல் காரணமும் இருந்து உள்ளது. செப்ரம்பர் 29ல் விரிவுரையாளரும் பெண்ணிலை வாதியும் மனித உரிமை வாதியுமான ரஜனி திரணகம பல்கலைகழகத்தை தாண்டிய சொற்ப தூரத்தில் இனம் தெரியாதோரால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.
1991 மே 19ம் திகதி கலைப் பீட மாணவியும் சர்வதேச பெண்கள் அமைப்புகளால் மிகவும் மதிக்கப்பட்ட பெண்ணிலை வாதியும் ஆன செல்வி சிவரமணி, தன் மீது அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டதை தொடர்ந்து 1989ற்கு பின் தான் எழுதிய கவிதைகளை தீயிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார்.
1991 தமயந்தி செல்வநிதி (செல்வி) international association of Poets, play wrights, Editors, Novelists (PEN) விருது பெற்றவர் தமிழீழ விடுதலை அமைப்பால் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.
1995 சீன தலைநகரில் நடைபெற்ற நான்காவது பெண்கள் மாநாட்டிற்கு கிழக்கு இலங்கை பல்கலைகழக விரிவுரையாளர் சித்திரலேகா மௌனகுரு, ஓவிய கலைஞர் அருந்ததி சபாநாதன் ஆகியோர் கலந்து கொண்டனார்.
2000 தொண்ணூறுக்களின் கடைசி பகுதியில் பெண் போராளிகள் பிரதான இராணுவ பிரிவாக்கப்பட்டது. மேலும் பாரிய இராணுவ தாக்குதல்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

பெண்களின் நிலை பற்றிய சில புள்ளிவிபரங்கள்:

புலம்பெயர்ந்த நாடுகளில் ஈழத்து பெண்களின் சுதந்திரம் - பெண்களின் பார்வையில்

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், வடக்கு இலண்டன் (எழுத்தாளர்): ஊரில் இருந்ததைவிட பெரிதாக எந்த சுதந்திரத்தையும் பெண்கள் பெற்றுவிடவில்லை. ஓரளவு பொருளாதார சுதந்திரம் உள்ளது. மற்றும் படி புனிதம், கற்பு என கலாச்சார பாதுகாவலர்களாக காட்டி பெண்களை இன்னம் ஓர் படி அதிகமாகவே அடக்குகின்றனர். மற்றைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் (இந்திய சமூக ஆண்கள்) எமது ஆண்கள் ஆண் ஆதிக்க வெறியர்கள் அல்ல. ஆனால் இன்னமும் உள்ள ஆண் ஆதிக்க போக்குகளை கைவிட வேண்டும். பொதுவாக ஆண்களிலும் பார்க்க எமது பெண்கள் ஐரோப்பியரை திருமணம் செய்வது அதிகரித்து வருகிறது. மறுபுறம் ஆண்கள் பெண்களிற்கு மட்டுமான பாலியல் ஒழுக்கம் கருதி இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் பெண்பார்க்கிறார்கள். இவ் இரண்டு போக்குகளுமே ஒன்றை ஒன்று முரண்பட்டு நிற்கிறது. அதாவது பெண்கள் கூடிய சுதந்திரத்தை எதிர்பார்த்து ஐரோப்பிய ஆண்களை நோக்கி திரும்புகிறார்கள். ஆண்களோ தமக்கு கட்டுப்பட்டு போக கூடிய பெண்களை தென் ஆசியாவில் தேடுகிறார்கள்.

காந்தி விக்ரர், டோவர் (இல்லத்தரசி): ஊரில் இருந்ததை காட்டிலும் பெண்களிற்கு இங்கு சுதந்திரம் அதிகம். எமது குடும்பத்தில் நாம் மகிழ்ச்சியாகவே இருக்கிறோம். ஏனையோரும் அப்படி தான் இருப்பார்கள் என நினைக்கிறேன். மற்றும் படி எனக்கு எதுவும் கூற தோன்றவில்லை.

சௌமியா செல்வராஜா, லூட்டன் (உயர்தர வகுப்பு மாணவி): இங்கு பெண்கள் முழுமையாக சுதந்திரம் பெற்றுவிட்டார்கள் என்று கூற முடியாது. இன்னமும் சீதனம் போன்ற பிரச்சனைகள் உண்டு. இங்குள்ள தொலை காட்சிகள் கூட சமையல் சம்பந்தப்பட்டவற்றிற்கு பெண்களை தான் விளம்பரத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

வசந்தி கைலாசநாதன், சவுத் பீல்ட்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

ASIAN FUNERAL CARE LTD

Phone 020 8909 3030
Fax 020 8907 6050
Mobile 0797 0934623

35 KENTON PARK PARADE,
KENTON ROAD,
KENTON,
HARROW, MIDDX. HA3 8DN

உங்கள் சொந்த கலாச்சார முறைக்கு தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும்

INDEPENDENT ASIAN OWNED FUNERAL DIRECTORS

SERVING ALL ASIAN COMMUNITIES THROUGHOUT LONDON

★ A PERSONAL TAILORED SERVICE TO MEET EVERY INDIVIDUAL RELIGIOUS AND CULTURAL NEEDS
★ WASHING AND DRESSING FACILITY
★ PRIVATE VIEWING AND SERVICE HALLS
★ 24 HOUR SERVICE
★ DISPERSEMENT OF ASHES ABROAD
★ COACH HIRE
★ FLORAL TRIBUTES
★ D.S.S CLAIMANTS WELCOME
★ INTERNATIONAL TRANSPORTATION SPECIALISTS
★ SATURDAY & SUNDAY FUNERALS ARRANGED
★ NEW PURPOSE BUILT PREMISES
★ CONTACT SANJAY LODHIA ON

020 8909 3030

# அகதிகளை முளையில் கிள்ள முயற்சி

## கடத்தலும் கட்டுப்படுத்தலும்; கட்டுநாயக்காவில் இருந்து ................?

(15 பெப், இலங்கை) - அகதிகள் உருவாவதை தடுப்பதற்கு பதிலாக, அவர்கள் தம்மை பாதுகாத்து கொள்ள நாட்டைவிட்டு வெளியேறுவதை கட்டுப்படுத்துவதற்கு; மேற்குலக நாடுகள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. விமான தொடர்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை 16ல் இருந்து 20 ஆக உயர்த்த உள்ளதாக உள் துறை அமைச்சு அறிவித்து உள்ளது. அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், 272 பயணிகள் ஆசிய விமான நிலையங்களில் இருந்து, தகுந்த பத்திரங்கள் இன்றி பிரித்தானியாவிற்கு விமானம் ஏற முயற்சித்த போது தடுக்கப்பட்டதை தொடர்ந்தே அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு எடுக்கப்பட்டது. இவ் அதிகாரிகள் பிரித்தானியாவிற்கு பெருமளவு அகதிகள், எந்த விமான நிலையத்தில் இருந்து வருகிறார்களோ; அந்த விமான நிலையம் சென்று தம் கண்காணிப்பை கடுமையாக்குவார்கள்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஆரம்பிக்கும் அகதி பயணம் உலகின் வெவ்வேறு பாகங்களிற்கு சென்றடைகிறது. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு பிரித்தானியாவிற்கு மட்டும் சராசரியாக தினமும் 14 பேர் வெற்றிகரமாக வந்து சேருகின்றனர். இங்கு வந்து சேர்பவர்கள் மட்டும் 14 பேர் ஆனால் முயற்சியில் தோல்வி கண்டவர்கள் பலர் இருப்பார்கள். அதைவிட உலகின் பல பாகங்களிற்கும் இவ் அகதி பயணம் நிகழ்வதால், தினமும் நூற்றிற்கு மேற்பட்டோர் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் ஊடாக வெளியேறுகின்றனர். இவ் அகதிகளை முளையிலேயே கிள்ளிவிடுவதே இக் கடும் நடவடிக்கையின் நோக்கம்.

நைஜீரியாவிற்கான நெதர்லாந்து தூதுவர் ஈழத் தழிழரிற்கு இலஞ்சம் பெற்று இலங்கை, நைஜீரியா ஆகிய தூதராலயங்களில் விசா வழங்கினார் என்று ஊழல் குற்றம் சுமத்தப்பட்டு உள்ளார். மேலும் ஈழத் தமிழரிற்கு இலஞ்சத்திற்கு விசா வழங்கியதாக குற்றம் நிருபிக்கப்பட்டு இரண்டு குடிவரவு அதிகாரிகளிற்கு நெதர்லாந்து நீதி மன்றம் தண்டனை வழங்கி உள்ளது. இந்த ஊழல் நடவடிக்கையால் 100ற்கு மேற்பட்ட ஈழத் தமிழர் நெதர்லாந்திற்கு வந்து உள்ளதாக கூறப்படுகிறது.

பஹ்ரெயினில் இருந்து அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்த 26 வயதுடைய சிவா, பிடிபட்டு திருப்பி அனுப்பப்பட்டார். இவர் தான் இலங்கையில் வேலை செய்ய விரும்புவதாகவும், ஆனால் முடியவில்லை. வெளிநாடுகளில் சுதந்திரமாக வேலை செய்ய முடியும், விரும்பியதை படிக்க முடியும் என்றும் BBC செய்தி நிறுவனத்திற்கு கூறி உள்ளார். அந் நிறுவனம் மேலும் வெளியிட்ட செய்தியில், இலங்கை கடத்தல்காரரிற்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதாகவும் கூறி உள்ளது. இலங்கை விமான அதிகாரி திரு வோல்ற்றர் றிக்கன்ஸ் இது பற்றி கூறுகையில், மிக நுணுக்கமாக களவான கடவு பத்திரங்கள் செய்யப்படுவதால் அவற்றை பிடிப்பது மிகவும் கடினமாக உள்ளது என்றார். மேலும் வெளிநாடுகளில் காணாமல் போகும் விசா முத்திரைகள் கடைசியில் இங்கு வந்து சேருகின்றன என்றும் குறிப்பிட்டார். அவர் தமது அதிகாரிகள் இலஞ்சம் பெறுவதையும் குறிப்பிட்டார்.

மனித உரிமை வழக்கறிஞர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் இலங்கையில் இருந்து வெளியேறும் ஈழத் தமிழர்கள் உண்மையான அகதிகள். அவர்களிற்கு பாதுகாப்பான சூழல் இலங்கையில் இல்லாத வரை, எல்லா தடைகளையும் தாண்டி; அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை; யாராலும் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டு உள்ளார். கனடா உயர்ஸ்தானிகர் தம் நாடு 3,000 இலங்கையரிற்கு ஆண்டுதோறும் விசா வழங்குகிறது. ஏனைய சில நாடுகளிற்கும் சட்டபூர்வமாக விசா பெற்று செல்ல முடியும். ஆனால் அவர்கள் இதற்கு முயற்சிக்காமல் எடுத்த எடுப்பிலேயே சட்ட விரோதமாக செயற்படுவதாக குற்றம் சாட்டினார். அதற்கு வழக்கறிஞர் பதில் அளிக்கையில் சட்டப்படி முயற்சித்து நம்பிக்கை இழந்ததாலேயே சட்டவிரோதமாக செல்கிறார்கள் என்றார்.

மேற்கு நாடுகள் கட்டுப்பாடுகளை அதிகரிக்க அதிகரிக்க அது தமிழ் மக்களிற்கு ஆபத்தாக முடியலாம் என அஞ்சப்படுகிறது. உயிரை பணயம் வைத்தும் தம்மீதான கொடுமைகளில் இருந்து விடுபட துடிக்கும் இந்த உண்மையான அகதிகள், கதவுகளும் அடைபட்டால் அபத்தான வழிகளை கையாள்வார்கள். கப்பல் விபத்து போன்ற சம்பவங்களை இலகுவில் மறக்க முடியுமா?

### சர்வதேச மகளிர்....

(கணக்கியல் பட்டதாரி): இங்கு பெண்களது சுதந்திரம் பற்றி அளவிடுவது சற்று கடினம். பொருளாதார அடிப்படையில் அவர்கள் ஓரளவு சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் கலாச்சார அடிப்படையில் பார்க்கும் போது சாமத்திய சடங்கு போன்ற பெண் அடிமைத்தன பாரம்பரியங்களை பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்கின்றார்கள். திருமணங்களின் போது சீதனம் இங்கும் முக்கிய இடம் பெறுகிறது. அந்நிய மண்ணில் வாழும் நாம், இம் மாற்று சூழலில் உள்ள நல்ல அம்சங்களை உள்வாங்கி; எம்மிடம் ஏற்கனவே உள்ள நல்ல அம்சங்களை பின்பற்றி எமது தனித்துவங்களுடன் வாழ பழகி கொள்ள வேண்டும். ஆனால் இங்கு ஓர் மறுதலையான போக்கும் உருவாகிவருகிறது. அதாவது இரு பக்கத்திலும் உள்ள பிற்போக்கு அம்சங்களை பொறுக்கி எடுத்து எமது தனித்துவத்தை அழித்து ஒழிப்பது. இது எமது புகழிட வாழ்வின் இருண்ட பக்கமாக உள்ளது. மேலும் பெண்ணிலை வாதிகள் அதி தீவிரமாக தமது கருத்துக்களை முன் வைப்பதால் அவை மக்களிடம் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும். அவர்கள் இதனை கருத்தில் எடுத்து அனைவரிற்கும் தமது கருத்துக்கள் சென்றடையும் விதத்தில் ஊடகங்களை பயன்படுத்த வேண்டும்.

சிவராஜினி ஜெயசங்கர், சறே (இல்லத்தரசி): ஊரில் சமூக கட்டுப்பாடு இருந்தது. இங்கு அந்த சமூக கட்டுப்பாடு இல்லாத அதிக சுதந்திரத்தால் பெரும்பான்மையான பெண்கள் தமிழ் கலாச்சாரம் பண்பாடு என்பவற்றிற்கு விரோதமாக செயற்படுகின்றனர். இன்னும் சிலர் தமிழ் கதைப்பதையே வெட்கமாக நினைக்கின்றனர். கண்மூடித்தனமாக மேற்கத்தைய கலாச்சாரத்தை பின்பற்றி தமிழ் சமுதாயத்தை சீரழிக்கின்றனர்.

## சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கையின் பிரித்தானிய உயர்ஸ்தானிகராக பதவி ஏற்றிருக்கும் திரு லால் ஜெயவர்த்தனவிற்கு எதிராக பெப்ரவரி ஆரம்பத்தில் எதிர்ப்பு ஊர்வலம் வைக்கப்பட்டது. உலக சிங்களவர் அமைப்பு தலைமையிலேயே இவ் ஊர்வலம் நடத்தப்பட்டு உள்ளது. திரு ஜெயவர்த்தன அவர்கள் புத்த மதம் சம்பந்தமாக தான் எழுதிய நூலில் சில கேள்விகளை எழுப்பி இருந்ததே இதற்கு காரணம். ஊர்வலத்தினர் லால் ஜெயவர்த்தனாவினை பதவி விலக்கும் படி இலங்கை அரசை கோரி இருந்தனர். திரு லால் ஜெயவர்த்தனா அவர்கள், பிரபல அரசியல் ஆய்வாளர் குமாரி ஜெயவர்த்தனாவின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றி ஊர்வலத்தில் கலந்து கொள்ளாத சிங்கள பிரமுகர் கருத்து தெரிவிக்கையில், "அவருடைய நூலில் சொல்லப்பட்ட விடயங்கள் புத்த சமயத்திற்கு மிகவும் பயன் மிக்க விடயங்கள். சிறந்த ஆய்வு நூல், ஆனால் ஏன் இவர்கள் அதற்கு எதிராக ஊர்வலம் சென்றார்கள்," என்று தெரியவில்லை என்று குறிப்பிட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அண்மையில் இன பிரச்சனை தொடர்பாக கருத்தரங்கு ஒன்றை நடாத்தினர். அதில் இலங்கையில் இருந்தும் ஓர் சிங்கள ஆசிரியை கலந்து கொண்டார். அவர் தனது கருத்தை முன் வைக்கையில், விடுதலை புலிகள் ஓர் பயங்கரவாத, கொடிய அமைப்பு; ஆனால் இன பிரச்சனையை தொடரவிட முடியாது; இதற்கு தீர்வு காண விடுதலை புலிகளுடன் பேசுவது இன்றியமையாதது என்று குறிப்பிட்டு இருந்தார்.

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்,
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள்
ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்கலுக்கு ஏற்ற சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் எண்ணங்கள் எங்கள் கை வண்ணத்தில்



ROYAL JEWELRY
றோயல் ஜுவலரி
287, HIGH STREET NORTH
EASTHAM - MANOR PARK
LONDON E12 6SL
Tel: 0208 472 5500

## உதயனின் கோணம்

# ஐரோப்பிய மொழிகளுக்கு இணையாக தமிழ்

புலம் பெயர்ந்து உள்ள நாடுகளில் தம் பிள்ளைகளிற்கு தாய் மொழியை கற்பிப்பதில் பெற்றோர் நிறைந்த சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். தமிழை வளர்க்க பல் வேறு தமிழ் சங்கங்கள் இருந்த போதிலும், அவற்றிடையே ஓர் இணைப்போ புரிந்து உணர்வோ காணப்படவில்லை. மாறாக போட்டியும் சமூக அந்தஸ்தும் தான் தலை தூக்கி இருக்கிறது. இந்த நிலை தமிழ் சங்கங்களிற்கு மட்டுமல்ல ஆலயங்களிற்கும் இதே நிலை தான். 'கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்' என்றார்கள் அன்று. காரணம் ஆலயம் என்பது அந்த சமூகத்துடன் பின்னி பிணைக்கப்பட்ட ஓர் அங்கம். தண்ணீர் அள்ளுவதற்கு ஆலய கிணற்றை பயன் படுத்துவதில் இருந்து சமூக ஒன்று கூடல் வரை, அந்த சமூகத்தின் உயிர் நாடியாக ஆலயங்கள் இருந்தன. ஆனால் புலம் பெயர் சூழலில் நிலை வேறு. இங்கு கிணறும் அன்னதானமும் அவசியமல்ல. இங்கு வேண்டியது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு. இதற்கு ஆலயங்கள் என்ன செய்ய உள்ளன?

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் தமிழ் சங்கங்களும் ஆலயங்களும் புதிது புதிதாக தோன்றுகின்றன. இது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது. ஆனால் அவை தம் நோக்கத்தை நோக்கி எவ்வளவு தூரம் முன்னேறுகின்றன. அந்நிய மண்ணில் புலம் பெயர்ந்து உள்ள நாம், தனித்தனியாக நின்று நீண்ட நாளைக்கு தாக்கு பிடிக்க முடியாது. நாம் இப்போதே சரியான அடித்தளம் இட வேண்டும். அப்படி இடுவதன் மூலம் தான் எமது சமூகம் தலை நிமிர்ந்து நிற்க முடியும். அதற்கு தமிழ் மக்கள் அமைப்பு வடிவத்திற்கு வர வேண்டும். இங்கு உள்ள தமிழ் பள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு சமூக நோக்குடன் செயற்பட வேண்டும். அப் பள்ளிகளிற்கு பொதுவான ஓர் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு கற்பித்தல் மேற் கொள்ளப்பட வேண்டும். இதற்கு தாயகத்தில் பணிபுரிந்த ஆசிரியர்களும் அதிபர்களும் இங்கு உள்ள பள்ளிகளுடன் இணைந்து செயலாற்ற வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் முதல் படியாக ஆரம்ப கல்வி மாநாடு ஒன்றை அதில் சம்பந்தப்பட்டவர்கள் எலலோரும் இணைந்து கூட்டி உடனடியாக தமிழ் குழந்தைகளின் தமிழ் கல்விக்கு அத்திவாரம் இட வேண்டும்.

அடுத்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள பாடசாலையில் இரண்டாம் மொழியாக தமிழை கற்பிக்க போராடுவது. வெள்ளை இனத்தவரிற்கு ஐரோப்பிய மொழிகளான பிரென்ச், டொச், ஸ்பானிஸ்ச், ................. போன்ற மொழிகளை கற்பதில் எந்த தடையும் இல்லை. அவர்களிற்கு தாய் மொழி ஆங்கிலம் ஆகையால் ஐரோப்பிய மொழிகளையோ அல்லது ஏனைய மொழிகளையோ கற்று தம் மொழித் திறனை வளர்த்து கொள்ளலாம். ஆனால் தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மையினர் தம் தாய் மொழியை தெரியாது ஐரோப்பிய மொழியை கற்க வேண்டியதன் அவசியம் என்ன. ( இன்னோர் மொழியை கற்று புலமை அடைவது வரவேற்கத்தக்கது. அதை தவறு என குறிப்பிடவில்லை. தொடர்பு மொழியை கற்று, தாய் மொழியையும் கற்ற பின், அவரவர் சொந்த விருப்பில் ஏனைய மொழிகளை கற்கலாம்.) பிரித்தானிய அரசு சிறுபான்மை இனரின் தாய் மொழியை இரண்டாவது மொழியாக கற்க வகை செய்ய வேண்டும். அதற்காக போராடுவது ஒவ்வோர் சிறுபான்மையினரதும் கடமை ஆகும்.

தாய் மொழி கல்வியே குழந்தைகளின் அறிவு திறனை வளர்க்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஸ்கன்டிநேவியன் அரசுகள் 6 வயது வரை தாய் மொழி கல்வியை ஊக்குவிக்கின்றன. இங்கும் சாதாரண தர, உயா தர பரீட்சைகள் உள்ளன. மேலும் இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஓர் பட்டப்படிப்பிற்கான பாடமாக கற்பிக்கப்படுகிறது. தாய் மொழிக்கு பாடசாலை அந்தஸ்த்து வழங்கப்படும் போது நிச்சயம் அதனை நோக்கிய ஆர்வம் மாணவர்களிடையே ஏற்படும். பிரித்தானியா ஓர் பல்லின சமூகமாக மாறிக் கொண்டிருக்கையில், அப் பல்லின சமூகத்தில் ஒவ்வோர் இனமும் தமது தனித்துவத்தை பேணுவது இன்றியமையாதது. இனத்தின் தனித்துவம் எனும் போது மொழி முதலிடம் பெறும். அந்த மொழி துண்டு பிரசுரங்களில் மட்டும் இருந்தால் போதாது. பள்ளியில் கற்பிக்கப்பட்டு சிறுபான்மை இனரும் தம் தாய் மொழியை கற்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப் பகுதியின் மூலம், பல்லின குழு மக்களால் தெரிவு செய்யப்பட்ட நியுகாம் நகர சபை பிரதிநிதி, மதிப்பிற்குரிய போல் சத்தியநேசன் அவர்கள் சிறுபான்மை இனங்கள் தம் தாய் மொழியை ஐரோப்பிய மொழிகளிற்கு இணையாக கற்க வழி செய்ய வேண்டும்; என பகீரங்க வேண்டுகோள் விடுகிறோம். தமது அடுத்த கூட்ட தொடரில் எமது கோரிக்கையை அவர் எனைய உறுப்பினர்களிற்கும் தெரியப்படுத்தி சிறுபான்மை இனங்களின் இந்த கோரிக்கைக்கு அரசை உடன்பட வைக்க வேண்டும்.

தமிழ் மக்களிற்காக இயங்கும் சமூக நல அமைப்புகளான தமிழர் தகவல் நடுவம், தமிழ் சங்கங்கள், ஆலயங்கள், கலை அமைப்புகள், மற்றும் தமிழ் ஊடகவியல் துறை சார்ந்த அமைப்புகள் ................ எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே குரலாக ஏனைய சிறுபான்மை சமூகத்துடன் இணைந்து தம் தாய் மொழியை இரண்டாம் மொழியாக கற்பிக்க நகராட்சி சபைகளை கோர வேண்டும்.

-------------- ஜெ. பா.

## கருணாகரன் V உள்துறை அமைச்சு செயலாளர்

(20 பெப், இலண்டன்) - அரசியல் தஞ்ச வழக்குகளில் விண்ணப்பதாரிகள், தம் நாட்டிற்கு தாம் திருப்பி அனுப்பப்பட்டால் தண்டனைக்கு உள்ளாவோம்; என்பதனை நிருபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். இப் போது அது நிரூபிக்கப்பட வேண்டிய தரம் மேலும் உயர்த்தப்பட்டு உள்ளது. கடந்த மாதம் 25ம் திகதி ஈழத் தமிழரான கருணாகரனின் மேன் முறையீட்டு வழக்கில் இது தெளிவாக வெளிப்பட்டு உள்ளது.

நல்லையா கருணாகரன், உள்துறை அமைச்சு செயலாளர், 1996 பெப்ரவரி 21ல் நாட்டை விட்டு வெளியேற்ற மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக, மேற்கொண்ட தொடர்ச்சியான முறையீட்டு வழக்கிலே, தான் திருப்பி அனுப்பப்படும் போது, குறிப்பாக தனக்கு ஏற்பட கூடிய ஆபத்தை நிரூபிக்க தவறினார். இவ் வழக்கின் படி 22 வயதான கருணாகரன் 1995ல் இராணுவ கெடுபிடிகளாலும் விடுதலை புலிகளின் பலவந்த ஆட்சேர்பினாலும் தனது ஊரான பருத்தி துறையில் இருந்து, இடம் பெயர்ந்து மீசாலை சென்று; பின் அங்கு இருந்து கொழும்பு வந்து, அங்கு வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் விடுவிக்கப்பட்ட மறுதினம் தனது சொந்த கடவு பத்திரத்துடன் இலங்கை கட்நாயக்கா விமான தளத்தில் இருந்து வெளியேறி; சிங்கப்பூர், மொரிசியஸ் ஊடாக இலண்டன் வந்தார்.

இவரிற்கு இராணுவத்தாலும் புலிகளாலும் பிரச்சனை இருப்பதை நீதிமன்றம் ஏற்று கொண்டது. ஆனால் குறிப்பாக நல்லையா கருணாகரன் என்ற நபரிற்கு இரணுவத்தாலோ விடுதலை புலிகளாலோ அச்சுறுத்தல் இல்லை; என்று அரச தரப்பு வழக்கறிஞ்ஞர் வாதிட்டு உள்ளார். அரச தரப்பின் வாதப்படி கருணாகரன் புலிகளதும் இராணுவத்தினதும் சோதணை சாவடியயை கடந்து கொழும்பு வந்து உள்ளார். கொழும்பில் விடுதலை செய்யப்பட்ட 48 மணித்தியாலத்திற்குள் தன் சொந்த கடவு பத்திரத்தில் நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். இதனால் இவர் இலங்கையில் நடக்கின்ற பொதுவான பாதிப்பிற்கு தான் உட்பட்டு உள்ளார். குறிப்பாக நல்லையா கருணாகரன் என்ற நபரிற்கு பாரிய ஆபத்து ஏதும் இல்லை; என்று அரச தரப்பு கூறியது. இதன் படி 1951 ன் பிரகடனப் படி அகதி அந்தஸ்தை பெறும் தகுதியை இழக்கிறார்.

# விசா பெற............

அதனை மீளாய்வு செய்யவும் கண்காணிக்கவும் வேண்டும் என்றும் கூறினார். அவர் மேலும் கூறுகையில் இத் திட்டம் இப்போது கவர்ச்சிகரமாக இருக்கலாம்; ஆனால் இது நடைமுறையில் உள்ள விசா வழங்கல் முறையை கீழ்படுத்தும்; என்றும் நடைமுறையில் உள்ள திட்டத்தின் தவறுகளை களைந்து அதனை நடைமுறைப்படுத்துவதே நீண்ட காலத்தில் நன்மை பயக்கும் என்றும் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் மிக் சற்வின் Joint Council for the Welfare of Immigrants(JCWI) சார்பாகவும் அம்ரித் வில்சன், நிர்மலா இராஜசிங்கம் ஆகியோர் South Asian Solidarity குழுவின் சார்பாகவும் கலந்து கொண்டனர். கடந்த எட்டு வருடங்களாக தன் பெற்றோரை பிரித்தானியாவிற்கு அழைக்க முயற்சித்து தோல்வி உற்ற ஜோர்ச் சபாரட்னம் தன் கசப்பான அனுபவத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டார்.

இத் திட்டம் மறைமுகமாக இனவாதத் தன்மை கொண்டது என்று குறிப்பிட்ட சற்வின்; இங்கு வந்து சட்டவிரோதமாக இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அவுஸ்திரேலியர்கள், பெருந்தொகையாக இந்நாட்டிற்கு வருபவர்கள் அமெரிக்கர்கள்; இப்படி இருக்க குறிப்பிட்ட தேச மக்களிற்கு மட்டும் (ஆபிரிக்க, ஆசிய நாட்டு) இத் திட்டத்தை கொண்டு வருவதும் அந் நாட்டு மக்களை சந்தேகிப்பதும் இனவாதமே என்றும் ஆணித்தரமாக கூறினார். அண்மையில் உள்துறை அமைச்சர் இனவாதம் மறைமுகவடிவில் இருப்பதாகவும் அதனை தான் களை எடுப்பதாகவும் கூறிவிட்டு இனவாதம் கொண்ட இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விளைவது ஜாக்ஸ்ரோ மட்டுமல்ல தொழிற்கட்சி கூட தனக்கு தானே முரண்பட்டு நிற்பதையே இது காட்டுகிறது.

இங்கு இனவாதம் ஆழமாக வேரூன்றி உள்ளதாக குறிப்பிட்ட அம்ரித் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்திற்கு அதன் பணிக்காக பாராட்டு வழங்கப்பட்டதை வன்மையாக கண்டித்ததுடன்; அங்கு கடைமையாற்றிய Entry Clearence Officers யை They are b-----d என்று சாடினார். மேலும் இப் பிணை திட்டம் நிறப்பிரிவினர், தம்மிடையே பண அடிப்படையில் ஏற்ற தாழ்வை ஏற்படுத்தவும் வழிசமைக்கும் என்றும் தெரிவித்தார்.

இத் திட்டம் இங்கு விசாவுடன் வந்து தங்கிவிடுபவர்களை தடுக்கவே அறிமுகம் செய்யப்படுகிறது. ஆனால் இங்கு சட்ட விரோதமாக உயிரை பணயம் வைத்து வருபவர்கள் முகவர்களிற்கு பத்தாயிரத்திலும் அதிகமாகவே கொடுக்கின்றனர் என்பது பரகசியமான இரகசியம். ஆகவே பத்தாயிரம் அவர்களிற்கு சிறிய தொகை நூறாயிரமாக கூட்டுங்கள் என்று ஆத்திரத்துடன் கூறினார் சட்டதுறையை சார்ந்த ஓர் பெண்.

நடைமுறைக்கு வர உள்ள இத் திட்டம் மிகுந்த நெருக்கடிக்கு அரசை தள்ள உள்ளது. பல்வேறு சிறுபான்மை குழுக்கள் இத் திட்டத்திற்கு எதிராக போர் கொடி தூக்க உள்ளனர். இன்று வரை எந்த ஓர் அமைப்போ குழுவோ வெளிப்படையாக இத் திட்டத்திற்கு ஆதரவு வழங்கவில்லை. ஆனால் வசதி படைத்த சிறுபான்மை இனத்தவரில் சிலர் இதனை ஆதரிக்கலாம் என்றே தெரியவருகிறது. ஆனால் பொதுவாக ஆண்டு வருமானமே £10,000 பெறும் நடுத்தர வர்க்க சிறுபான்மை இன மக்களிற்கு இது பாரிய சுமை. மேலும் உள்துறை அமைச்சு பத்தாயிரத்தையும் பணமாகவே எதிர்பார்க்கிறது. கொண்டு செல்லும் போது யார் பணத்திற்கு பாதுகாப்பு வழங்குவது. குரொய்டனில் வழிப்பறி கும்பல் தலைமையகமே திறந்துவிடும் என்ற உண்மை ஜக் ஸ்ரோவின் குற்ற புள்ளி விபரங்களில் இல்லையா என்ற கேள்வியும் எழுகிறது.

குறிப்பிட்ட இன மக்களை மட்டும் கட்டுப்படுத்தும் இத் திட்டம் அவ் இன மக்களின் சம வாய்ப்பு மற்றும் சம உரிமையை மறுக்கிறது. மேலும் நடை முறையில் உள்ள விசா வழங்கப்படும் செயன்முறை வெறும் சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட தேசமக்களின் பயண வாய்ப்பை மறுக்கின்றது. இச் செயன் முறை தவறுகள் களையப்பட்டு பொதுவான விரைவான விசா முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் போலியாக தஞ்சம் கோரி அரசின் திறைசேரியை சுரண்டுபவர்களின் எண்ணிக்கை குறையும். அதைவிட்டு விட்டு இப் புதிய முறையை அரசு அமுல்படுத்துமானால், கிணறு வெட்ட பூதம் வந்த கதையாகவே அமையும்.


## உதயன் பற்றி......

**About UDHAYAN...**

நிர்வாக இயக்குநர் - Dr. T. Ravi kumar
நிருபர் - T.Jeyabalan
விளம்பர மேலாளர் - T.P.Pillai
ஆசிரியர் குழு

Published in London by
(Global News Media) GNM (P) LTD.

"GEMINI HOUSE"
25/27 High Street Edgware
Middlesex HA8 7EE

செய்தி மற்றும் விளம்பர தொடர்புபளுக்கு:
Tel: 0181 905 7775
Tel/Fax: 0208 952 5677
e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

- Please send us the Advertising Matter/ News Articles to our e-mail or in a floppy diskette.
-Pictures should be in tif. format for best results.
-For any technical doubts please contact graphics designer Swamy in one of the above mentioned telephone numbers.

We are developing our Reader's database. To have an account of the udhayan's readership and possibly send any compliments, could you please fill-in the following details and send us by post/e-mail.

Name - ..........................................................
Address -.......................................................
.....................................................................
.....................................................................
Tel. No.:- .......................................................
Sex:- M/F
Age Group - under 15 / 16-29yrs / 30-40yrs / 41-60yrs/over 60yrs



**WEMBLEY GREETING CARDS LIMITED**

**(CASH & CARRY)**

WHOLESALERS OF GREETING CARDS, STATIONERY & TOYS

உங்களின் பிறந்த தினமா. திருமண நாளா. மற்றும் ஏனைய வைபவ"களுக்கும் தெவையான அனைத்துப் டிபாருட்களுக்கும். மலிவாக. தரமாகப் டிபற்றிட ஒரெயிடம்.'.

*Plastic cutlery, Plates, Bowls, Spoons, also party/weddings decoration*

*Open from Monday to Friday - 10a.m to 8p.m Saturday Closed Sunday - 10 a.m to2 p.m*

WEMBLEY STADIUM INDUSTRIAL ESTATE
FIRST WAY WEMBLEY MIDDLESEX HA9 OTU

Tel: 0181 903 8990
Fax:0181 903 5812

NORTH HARROW SUPER STORE

83, STATION ROAD,
NORTH HARROW,,
MIDDX. HA2 7SW

TEL: 0181-863 9464 FAX: 0181-424 0974

• இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட தரமான சகல உணவுப் பொருட்களும், உங்கள் தெரிவுக்கேற்ற கடல் உணவு வகைகளையும், சகல விதமான மதுபான வகைகளையும், உங்களின் மனங்கவர் மரக்கறி வகைகளையும் மற்றும் CD, AUDIO & VIDEO போன்றவைகளையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

NORTH HARROW SUPER STORE

புதிய நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டு சகலரையும் இன்முகத்துடன் வரவேற்றுக் கொண்டிருக்கும் தமிழர் கடை. ஒருமுறை விஜயம் செய்தால் மறுமுறையும் உங்கள் மனம் நாடும் ஒரே இடம்.

NORTH HARROW SUPER STORE

*BODY *WARMERS *HIKING *BOOTS

HARTEX

Established 1969

THE GREAT OUTDOORS

*TENTS *SLEEPING BAGS *AIR BEDS *MAP CASES

*RAINWEAR *CUTLERY SETS & PLATES *WATER BOTTLES

Pullovers
Cookware
Tents
Rucksacks
Hammocks
Headwear
Maps
Gaiters
Shorts
Socks
Thermal
Underwear
Ground
Sheets



Combat
Clothing
Rainwear
Boots
Gloves
Belts
Water
Bottles
Body
Warmers
Webbing
Hicking
Socks
Foam
Mats
Air Beds

HALF PRICE SALE
NOW ON

OPEN 7 DAYS

| 55 Victoria Road | 321 Northolt Road |
|---|---|
| Ruislip Manor | South Harrow |
| Middlesex HA4 9BS | Middlesex HA2 8JA |
| TEL:01895 634244 | TEL:0181-864 3333 |

* COMPRESSOR BAGS *MONEY BELTS

NOORI Foods

793 Romford Road, Manor Park, London E12 5AN

Tel: 0181 514 8999

Fax: 0181 478 1441

பெரிய கடை
நிறைய சமான்கள்
மிக மலிவான விலை
தரமான பொருட்கள்
(மரக்கரி, பழவகைகள், பலசரக்கு சாமான்கள் மற்றும் பலப்பல
பொருட்கள் நிறைந்திருக்கும் பெரிய Cash & Carry நூரீ
மொத்தமாகவும் சில்லரையாகவும் எம்மிடத்தில் மலிவான
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வாருங்கள் ..... வாருங்கள் ...... உங்கள் நூரீக்கு

NOORI HALAL BUTCHERS

328 High Street North, Manor Park, London E12 6PH

Tel: 0181 472 1655
0181 472 1667
0181 472 1677

உங்கள் தேவைக்கேற்ப சின்ன
சின்ன துண்டுகளாக வெட்டித் தரப்படும்